www.padippakam.com



# தென்மொழி



## உள்ளே...


சாலையார் மறைவும்!
தமிழர் கடமையும்!

பச்சிலை வாடி
விடலாகாது!

மாதப்போக்கின்
புதிய கருத்து!

இடைவெளிகள்

உள்ளங்கைக்குள் உலகம்

இந்த ஆண்டும்
தொழிற்கல்வியில் தமிழ்
புறக்கணிக்கப்பட்டு
விட்டதே!

விழாக்களும், பூசைகளும்.

செய்திகள்

ாலையார் மறைவுச் செய்தி


**நிற்பாய் எம் நெஞ்சில் நிறைந்து!**

வையமெலாந் தாம்பரந்து வாழுந் தமிழ்மக்கள்
உய்யவே நாளும் உழைத்திருந்தாய் — மெய்யான
நற்புகழ்சேர் சாலை இளந்திரைய வேழமே
நிற்பாயெம் நெஞ்சில் நிறைந்து!

— இறை


சுவடி - 30
ஓலை - 10
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 துலை (அத்தோபர் - 1998)


படிப்பகம்

www.padippakam.com



# நட்பும் பகையும்!

தம்மை முழுமையாய்த் தமிழ்க்குத் தருபவர்
எம்மவர் ஆயினும் எதிர்ப்பவர் ஆயினும்
எம்மூர் ஆயினும் எவ்வூர் ஆயினும்
அம்மையும் அப்பனும் ஆவார், எமக்கு!
அவரே நல்வழி காட்டியும் நமக்கு!

எதையும் கருதா(து) இனத்திற் குழைப்பவர்
புதியோர் ஆயினும் பழையோர் ஆயினும்
முதியோர் ஆயினும் இளையோர் ஆயினும்
விதையும் எருவும் ஆவார், எமக்கு!
வேந்தரும் தலைவரும் அவரே, நமக்கு!

நலன்கள் நாடாது நாட்டை மீட்டிடப்
புலனும் உழைப்பும் பொழுதும் தருபவர்,
இலவோர் ஆயினும் எளியோர் ஆயினும்
வலவரும் மறவரும் ஆவார், எமக்கு!
வாழ்க்கை நண்பரும் அவரே, நமக்கு!

தமிழ்,இன, நாட்டினைத் தந்நலம் கருதி
இமிழ்பகை கைக்கொள இரண்டகம் செய்வார்
சிமிழ்தகைக் குன்றுடைச் செல்வரே ஆயினும்
உமிழ்தகு புல்லியர் ஆவார், எமக்கு!
ஒழிதகு பகைவரும் அவரே, நமக்கு!

— **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**
***'தென்மொழி' சுவடி : 22, ஓலை : 3 — 1986***

படிப்பகம்

www.padippakam.com



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*(நிறுவனம் தி.பி.1990 (1959)*

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



# தென்மொழி

மொழி—இனம்—நாடு

**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

*இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அந்நகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தாய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.*

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.30 தி.பி. உ0உகூ - துலை (அக்தோபர்-'98) ஓலை.10

# சாலையார் மறைவும்! தமிழர் கடமையும்!

தமிழ் அறிஞர்கள், இனவுணர்வாளர்கள், பகுத்தறிவாளர்கள் ஆகியோரிடையே 'சாலையார்' என்று அன்போடும் மதிப்போடும் குறிக்கப்பெற்ற அறிவியப் பாவலர் முனைவர் சாலை இளந்திரைய னார் அவர்கள், தாம் மேற்கொண்ட இடையறாப் பணிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்; பேரா இயற்கை அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டது!

தில்லிப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் விளங்கிய சாலையார் மாணாக்கர்கட்கு இலக்கண இலக்கியங்களைப் பயிற்றியது மட்டுமன்றி நூற்றுக் கணக்கானோர்க்குத் தமிழ்ப்பற்றை ஊட்டினார்; இனவுணர்வைத் தூண்டினார்; பகுத்தறிவுப் பாதையைச் சுட்டினார்.

தில்லியில் சாலையாரது இல்லம் தமிழ் இன வுணர்வாளர்க ளின் விருந்தினர் மாளிகையாகவும் பன்னாட்டுத் தமிழர்களும் சந்திக்கும் கூடமாகவும் விளங்கியது.

எட்டு உலகத் தமிழ் மாநாடுகளைப் பல்வேறு நாடுகளில் பெரிய அளவில் நடத்துதற்கு அடிப்படை அமைப்பான 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' தில்லியில் சாலையாரின் உறுதுணையாலேயே

படிப்பகம்

www.padippakam.com



கால்கொண்டது. தனிநாயக அடிகளும், முனைவர் கா.பொ. இரத்தினம் உள்ளிட்ட பலரும் சாலையார் முன்னிலையிலேயே அம்மன்ற அமைப்புக்கான நெறிமுறைகளை வகுத்தமைத்தனர்.

அவ்வாறே தமிழ்நாட்டிலும் சாலையாரின் பேரவை இல்லம் தமிழ் இனநலத் தொடர்பான முயற்சிகளை முன்னெடுக்கும் பாசறையாக விளங்கியது.

தமிழீழ விடுதலையில் தணியாத வேட்கைகொண்ட சாலையார் ஐயா அவர்களின் பேரவை இல்லத்திலேயே தமிழீழ ஆதரவாளர் கூட்டமைப்புக்குக் கால்கோள் செய்யப்பட்டது.

உலகெங்கும் – பன்னாடுகளில் பரவி வாழுந் தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியைப் பேணியும் பண்பாடுகளைக் கடைப் பிடித்தும் கலைகளை வளர்த்தும் அறிவுத் துறைகளில் மேம்பட்டும் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பது சாலையாரின் உள்ளக் கிடக்கை. இன்று மலேசியாவில் கோலாலம்பூரைத் தலைமை யிடமாகக் கொண்டு பல்வேறு நாடுகளில் பசுமையாகக் கிளை பரப்பியுள்ள ‘உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை’, நான்காவது உலகத் தமிழ் மாநாடு தமிழீழத்தில் – யாழ்ப்பாணத்தில் நடந்த போது முனைவர் சாலையார் ஐயா அவர்கள்.

பல்வேறு தமிழ்நல, பொதுநல அமைப்புகளை ஒருங்கிணைத்துப் பாவலரேறு ஐயா அவர்கள் முன்னெடுத்து நிறுவிய ‘தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி’யில் சாலையாரின் அறிவியக்கப் பேரவையும் இடம்பெற்றிருந்தது. அம் முயற்சியில் பாவலரேறு அவர்களுக்குப் பெரிதுந் துணைநின்றவர் சாலையார் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சாலையார் எதையும் சொல்வதோடு நிறுத்திக் கொண்ட தில்லை. அதற்குச் செயல்வடிவங் கொடுப்பதில் அவரே முன் னின்றார்.

தம் பெற்றோர் சூட்டிய முன்னைப் பிறமொழிப் பெயரைக் களைந்துவிட்டு ‘இளந்திரையன்’ என்னும் இன்றமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொண்டார் சாலையார். அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் பெயரும் அவ்வாறே தமிழ்ப் பெயராயிற்று. ஆயினும் ஊர்ப்பெயரையொட்டி யமைந்த சாலையார் என்னும் பெயரும் சாவினியார் என்னும் பெயருமே தமிழ்நெஞ்சங்களில் பதிந்து விளங்குகின்றன.

கணவனுக்கு மனைவியும் மனைவிக்குக் கணவனும் வாழ்க்கைத் துணை என்பது திருவள்ளுவர் கண்ட செந்நெறி. அந் நெறியைச்

படிப்பகம்

www.padippakam.com



செம்மையாகக் கடைப்பிடித்தவர்கள் ஐயா சாலையார் அவர்களும் அம்மா சாலினியார் அவர்களுமே யாவர்.

பெண்ணுரிமை பற்றிப் பேசுவோர் தொகை பெருகியிருப் பினும், அதனை உண்மையாகப் பேணுவதில் தலைநின்றவர் சாலையார் என்பது குறிப்பிடத் தக்கது. இணைபிரியா அன்றில்க ளாய் ஒன்றிவாழ்ந்த அவ் இணையர்தம் வாழ்வு எல்லாரும் பின் பற்றத்தக்க ஏற்றம்மிகு பெருவாழ்வு!

இயல்பாகவே விளம்பரத்தையும் வீண் ஆரவாரத்தையும் விரும்பாத சாலையார் தாம் இயற்கை யெய்திய பின் தம் சடலத்தை மருத்துவ ஆய்வுப் பயனுக்காக ஒப்படைக்க விரும்பிக் கடந்த ஏழாண்டுகளுக்கு முன்னரே மருத்துவத்துறை அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியிருந்திருக்கிறார்; அதைச் செயற்படுத்தச் செய்திருக் கிறார் என்பது அவரது அறிவாண்மைக்குத் தலையாய சான்று.

ஒருவர் இறந்தால் அவரது சடலத்தை எரித்த சாம்பலைச் சுமந்துகொண்டு, பொதுமக்களின் வரிப்பணத்தைக் கோடிக் கணக்கில் செலவிட்டு, நாற்றிசையுஞ் சுற்றித்திரியும் 'நல்வினை'யாளர்கள் சாய்கால் பெற்றுள்ள இற்றை நாளில், சாலையாரின் அறிவாண்மை எத்துணைப் பெருமிதமானது என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்!

**அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

என்னும் வாய்மொழியை இவ்வகையில் –தமது சடலக் கொடையின் மூலம் மெய்ப்பித்துள்ளார் சாலையார்.

தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் மக்களின் அனைத்துநிலையினும் பயன்படுத்தப்படும் வாழ்வியல் மொழியாக வும் விளங்கவேண்டும்; தமிழர்கள் தன்மானத்துடனும் தன்னுரிமை யோடும் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பது அவரது அவா. அதன் பொருட்டு அவர் எழுதிய ஏடுகள் – நூல்கள் பல. பேசிய கூட்டங்கள் பல; நடத்திய மாநாடுகள் பல; எதிர்கொண்ட போராட்டங்கள் பல. அவரைச் சிறையிலடைத்தும் அவர்மீது வழக்குத் தொடுத்தும் அல்லற்படுத்தி அலைக்கழித்தது அரசு.

'அறிவியக்கப் பேரவை'யை நிறுவியும், 'அறிவியக்கம்' எனுந் தாளிகையைத் தொடங்கி நடத்தியும், நல்ல தமிழ்நடையில் அரிய பல நூல்களை ஆக்கியும் சாலையார் – சாலினியார் இணையினர் மேற்கொண்ட முயற்சிகள் பலப்பல. அவற்றை யெல்லாம் பயன் படுத்திக் கொள்ளவும் இயலாதவனாய்க் கட்சி அரசியலிலும் தொலைக்காட்சி வடக்காட்சிகளிலும் திரைக்காட்சிகளிலும் நடிகர்

படிப்பகம்

www.padippakam.com



நடிகையரின் உடற்காட்சிகளிலும் அவற்றின் அசைவுகளிலும் மயங்கிக் கிடக்கிறான் தமிழன்.

ஐயா பாவலரேறு அவர்களைப் போலவே, தாம் தெளிந்துணர்ந்த கொள்கையைத் திட்பமாகக் கொண்டு, எதற்காகவுந் தடம்புரளாமலும் எந்நிலையிலுந் தளர்ச்சியடையாமலும் இறுதி வரை செயற்பட்டு வந்த பெருமை சாலையாருக்கு உண்டு. தம் பின்னால் எத்தனைப் பேர் வருகிறார்கள் என்று அவர் எண்ணிப் பார்த்ததில்லை. குறைந்த எண்ணிக்கையைக் கண்டு அவர் கவலைப் பட்டதில்லை. அவருக்குச் சரியெனப்பட்டதை இறுதிவரை ஒல்லும் வகையிலெல்லாம் வெளிப்படுத்திக் கொண்டும் செயற்படுத்திக் கொண்டும் இருந்தார். எத்துறையாயினும் முன்னோடியாக விளங்கும் கொள்கையாளர் – சீர்திருத்தக்காரர் நிலை அத்தகையதாகத்தான் இருக்கும்.

சாலையார் அவர்கள்; ஐயா பாவலரேறு அவர்களின் மொழி இனநலப் பணிகளைத் தென்மொழியில் தொடக்கக் காலத்திலேயே அறிந்துணர்ந்து, இல்லந் தேடிவந்து பெரிதும் பாராட்டி மகிழ்ந்தவர்கள். அது என்றும் தொடர்ந்தது. பாவலரேறு அவர்கட்கும் சாலையார் அவர்கட்கும் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் இருப்பினும், இடையிடையே பிணக்குகள் சில நேரினும் இருவருமே அவற்றைப் பெரிது படுத்தாமல் தமிழ் இனநல மேம்பாட்டு முயற்சிகளில் ஒன்றிநின்றார்கள். நிகழ்ச்சிகளிலும் போராட்டங்களிலும் இணைந்து பங்கேற்றார்கள்.

பாவலரேறு ஐயா அவர்களின் மறைவின்போது, ஐயா சாலையார் அவர்கள் "என் தம்பி என்னைத் தவிக்க விட்டுவிட்டுப் போய் விட்டானே! என் உடல் உறுப்புகளுள் ஒன்றை யாரோ பறித்தெடுத்துக் கொண்டதுபோல் ஆகிவிட்டேனே! தம்பீ! எத்தனைப் பொறுப்புகளை நாம் ஏற்றுக்கொண்டிருந்தோம். இப்போது நான் மட்டும் தனித்து நின்று அவற்றை யெல்லாம் எவ்வாறு செய்வேன்!" என்று கதறி அழுது கண்ணீர் வடித்தது, அவர்தம் உண்மையான அன்பு உள்ளத்திற்கும், மொழி இன நாட்டு நலனில் கொண்டிருந்த உண்மையான அக்கறையுணர்ச்சிக்கும் தொண்டு மனப்பான்மைக்கும் சான்றாய் அமைந்து, தமிழ் நெஞ்சங்களை நெகிழ்ந்துருகச் செய்தது.

தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்னும் நிலையில் அவற்றின் நலமும் வளமும் உரிமையும் உயர்வுந் தவிர, தந்நல நோக்கிலான எவ்வகை எதிர்பார்ப்புமின்றி, அச்சமும் தயக்கமும் அறியாது, அல்லல்களையும் நோயையும் புறங்கண்டு, அயராது முயன்று அவர் இடைவிட்டுச் சென்ற அரும்பணியைத் தொடர்வதே தன்மானமுள்ள தமிழர்கள் அனைவருக்கும் முன்னிற்கும் பெருங்கடமை. இளைய தலைமுறையினர் இத்தகைய அரும்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதற்கு அணியமாகுக!

— இறை

படிப்பகம்

www.padippakam.com

# பச்சிலை வாழ விடலாகாது!

தமிழ்நாட்டில் சில ஆண்டுகளுக்குமுன் புதிய செய்தியாகவும் எங்கும் ஒரே பேச்சாகவும் இருந்தது இராமரின் பச்சிலை எரிபொருள். அரசியல்காரர்களும் அறிவியல் அறிஞர்களும் அவரை மொய்த்துக் கொண்டிருந்தனர்.

நாளடைவில் அவர் ஏமாற்றுக்காரர் என்பதாகக் கூறி அனைவரும் அவரை நடுத்தெருவில் விட்டுவிட்டனர். அவர்கள், அவர் செய்வதெல்லாம் கண்கட்டு ஏமாற்று எனவும் ஏதோ கன்னெய் மெழுகுக்குச்சி ஒன்றைக் கொதிக்கும் வெந்நீரில் கலக்குவதன்வழிக் கன்னெய் உருகி மேலே மிதக்கிறது. அதை எரித்துக் காட்டி ஏமாற்றுகிறார் என்று இந்தியத் தொழில்நுட்ப நிறுவன அறிஞர்களும் கூறிவிட்டனர்.

'இவ்வாறு தமிழ்நாட்டுச் சிற்றூர்க்காரர் ஒருவர் பச்சிலையைக் கொண்டு ஓர் எரிபொருளைக் கண்டு பிடித்திருந்தால் நல்லதுதானே. இதில் உண்மை இருந்துவிடக்கூடாதா?' என்ற ஆற்றாமை நமக்குத் தோன்றியது. அத்துடன் திரு. இராமரைப் பார்க்க ஒரு வாய்ப்பும் அமைந்தது. அவர் மனம்விட்டுப் பேசினார். தாம் புறக்கணிக்கப் படுவதை விளக்கினார். அதே நேரத்தில், வெளிநாடுகள் பலவற்றி லிருந்து இவரின் செய்முறையை விலை பேசப் பலர் வந்ததையும் அவர்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டுக் காப்பாக இருப்பதாகவும் கூறினார். அமெரிக்காவின் ஒரு நிறுவனம் இவரைப் பாராட்டிச் சிறப்பியம் ஒன்றை வழங்கியுள்ளது. அதன் மடலை நம்மிடம் காட்டினார்.

மேலும், தாம் 'மூலிகைப் பெட்ரோல்' என்று அறிவித்ததால் தான் சிக்கல் வந்துவிட்டது' எனவும் இப்போது இதற்கு 'மாற்று எரிபொருள்' எனப் பெயரிட்டிருப்பதாகவும் கூறினார்.

'இந்நாட்டு அறிவியல் தொழில்நுட்பம் மதிக்கப்படாமல் இருக் கிறதே' என்று எண்ணி, ஓர் அமைப்பினை நிறுவி இதற்காகச் செயற் பட எண்ணினோம். அதன் விளைவாக 'தமிழக அறிவியல் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கினோம். இந்த அமைப்பின் முகாமையான தேவை பற்றிச் சில:

இம்மண்ணில் தோன்றிய அறிவு புறக்கணிக்கப்படுகிறது. மக்களின் திறமைகளையும் கண்டுபிடிப்புகளையும் தொடக்கத் திலேயே கருகச் செய்வதே பன்னாட்டு வணிகர்களின் நுழைவாக இருந்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



அதனால், இந்நாட்டின் பழந் தொழில்நுட்பங்களை யெல்லாம் அழித்துக் கொண்டு, வெளிநாட்டுப் புதுக் கண்டுபிடிப்புகளை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கும் இழிநிலைக்கு இவ்வளவு பெரிய நாடும் அதன் பெருந்தொகையுள்ள மக்களும் தள்ளப்பட்டுள்ளனர். அறிவியல்-தொழில்நுட்பத்தை மக்களிடையே ஊக்கப்படுத்துகின்ற சிறுசிறு நாடுகளுங்கூட வணிகத்தாலும் பொருள் நிலையாலும் முன்னேறியுள்ளதும் அல்லாமல் இந்நாட்டையும் இந்நாட்டு மக்களையும் ஆளுமைப்படுத்திக் கொண்டுள்ளன.

இதைத் தவிர்ப்பதற்கும் மக்களையும் இந்நாட்டையும் அவ்வாளுமைகளின்று மீட்பதற்கும் அறிவியல் தொழில்நுட்பத்தைத் தன்னளவில் நிறுத்திக் கொள்ள மக்கள் அறிவியல் அமைப்பு ஒன்று தேவைப்படுகிறது. அரசியலார் சிலரும் வணிகர் சிலரும் பன்னாட்டு வணிகர்களுக்கு விலைபோகும்போது, அதை எதிர்த்து நிற்கவும் நாம் முன்னேறவும் தன்முன்னேற்றத்திற்கும் இந்நாட்டு அறிவியல்-தொழில்நுட்பத்தை ஊக்குவது இன்றியமையாதது.

இந்த அமைப்பு தன் முதற்பணியாக ‘இராமர் பச்சிலை எரிபொருள்’ எந்த அளவிற்கு உண்மையானது, எந்த அளவு நடைமுறையில் இயலுவது என்று ஆராய்வதை எடுத்துக்கொண்டது.

இப்பச்சிலை எரிபொருள் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினரால் ஆய்வு செய்யப்பட்டது பற்றிய குறிப்புகளைத் திரு. இராமர் நம்மிடம் காட்டினார். அதில் கன்னெயையும் பச்சிலை எரி பொருளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்திருந்தனர் என்பது தெரிந்தது.

இந்தியத் தொழில்நுட்ப எந்திரப் பொறியியல் துறையின் உள்ளெரி ஆய்வகம் கொடுத்த முடிவுக் குறிப்புகளாவன:

*எங்களின் ஆய்வுச் சான்றுகளின்வழிப் பச்சிலை எரிபொருள் பயன்படுத்தம், கன்னெய்ப் பயன்படுத்தத்தைவிட நன்றாக உள்ளது; கன்னெயைவிடச் சிக்கனமானது. கன்னெய் எரிபொறியை(Petrol Engine) எந்த மாற்றமும் செய்யாமல் இந்தப் பச்சிலை எரிபொருள், கன்னெய்ப் பொறியை இயக்குகிறது. இந்தப் பச்சிலை எரிபொருள் உருவாக்கப்பட்டவுடன் 10 விழுக்காடு சிக்கனத்தையும் பதப்படுத்திய நிலையில் 20 விழுக்காடு சிக்கனத்தையும் தருகிறது.*

*ஆய்வுகளின்வழி இந்தப் பச்சிலை எரிபொருள் இரு உதைப்புப் பொறிகளில் நல்ல திறன்கொண்டதாக உள்ளது. மேலும் நான்கு உதைப்புப் பொறிகளிலும், தீசல்(Diesel) பொறிகளிலும் கூடுதல் ஆற்றலைத் தரவல்லதாக உள்ளது. மேற்கொண்டு இதன் ஆய்வில் பல நற்பயன்கள் விளைய வாய்ப்புகள் உள்ளன.*

படிப்பகம்

www.padippakam.com



It is evident from the Figs. 1 and 2 that the fuel consumption is better with herbal fuel compared to petrol. That is to say that herbal fuel gives a better fuel economy compared to petrol. It should be stressed that there was no modification made in the engine for using the herbal fuel. It is seen from Fig. 3 that with fermented herbal fuel the economy improves by more than 20% whereas the freshly prepared sample shows only about 10% improvement.

From the tests carried out, it is seen that the given herbal fuel has a good potential in two-stroke engines. Further, from the experience in running the engine it is felt that the fuel will have good potential in a four-stroke petrol as well as diesel engines. It is worthwhile to test the fuel in the above engines also. Further, research on this fuel is likely to yield more insights.

இம் முடிவுகளிலிருந்து ஒன்றை உறுதியாக நாம் தெரிந்து கொள்ளலாம். திரு. இராமர் கொடுத்த எரிபொருள் கன்னெய் அன்று. கன்னெயைவிடத் திறன் வாய்ந்தது; சிக்கனமானது; கன்னெய்ப் பொறிகளை இயக்கவல்லது.

அதன்பின், அதே நிறுவனத்தின் அறிவியலறிஞர்கள் வேறு சிலர் 'ஏதோ குழாயில் கன்னெய் நிரப்பி, மெழுகு அடைத்து ஏமாற்றிய தாக்' கூறிய செய்தி போன்ற உள் அரசியலில் நாம் தலையிடத் தேவையில்லை. அது அறிவியலோ உண்மையோ அன்று என்று தெளிவுறலாம்.

இந்தத் தெளிவிற்குப்பின் செய்தியாளர்கள், அறிஞர்கள், தொழில் முனைவோர்களுக்கு முன், மெய்ப்பிப்பு உருவாக்கம் (Demonstrations) செய்து காட்டும்படி ஒரு வாய்ப்பினைத் தமிழக அறிவியல் கழகத்தின் சார்பில் அமைத்திருந்தோம். 6.9.98 அன்று சென்னை, செய்தியாளர்க் கழகக் கட்டடத்தில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருபத்தைந்து இதழ்களின் செய்தியாளர்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்தனர்.

இந்நிகழ்ச்சியில் 9.9.98 அன்றிலிருந்து அம்மாத இறுதிவரை செய்தியாளர்களுக்கும் தொழிலறிஞர்களுக்கும் அரசு உயர் அதிகாரிகளுக்கும் இலவயமாகவும் ஆய்வுக்காகவும் பச்சிலை எரி பொருள் வழங்குவதாகத் திரு. இராமர் அறிவித்தார். அத்துடன் பச்சிலை எரிபொருளை மூன்று முறைகளில் உருவாக்கி எரித்தும் காட்டினார். அனைவரும் வியந்து பாராட்டினார்.

அடுத்து இலவயமாக எரிபொருள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை – கோடம்பாக்கம் நயகாரா விடுதியில் 9.9.98 அன்று நடந்தது.

படிப்பகம்

www.padippakam.com



செய்தியாளர் கூட்டமும் தொலைக்காட்சியினர் கூட்டமும் நிரம்பி, நூறு பதினங்களுக்கு மேல் இலவயமாகப் பெற்று அங்கேயே அவரவர் இரு சக்கர வண்டிகளில் ஊற்றிக்கொண்டு ஓட்டிப் பார்த்துச் சென்றனர்.

இச்செய்திகளெல்லாம் செய்தித்தாளில், தொலைக்காட்சிகளில் இடம் பெற்றிருந்தன. கன்னெய் வழங்கும் இந்நிகழ்ச்சி மருத்துவர் **சாமி சண்முகம்**, தமிழக அறிவியல் கழக அமைப்பாளர் மா. பூங்குன்றன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இச்செய்திகளையெல்லாம் செய்தித்தாளில் கண்ணுற்ற பிரஞ்சு நாட்டுச் சுற்றுப்புறச் சூழலியல் அறிவியலறிஞர் முனைவர் **இலேம்பார்த்து. தி. நிக்கோலசு** அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த போது, அவர் சார்ந்திருக்கும் பிரஞ்சு நிறுவனச் சார்பில் திரு. இராமரைச் சிறப்பித்துத் தங்கப் பட்டயம் ஒன்றை வழங்கினார். அந்நிகழ்ச்சி 16.9.98 அன்று சென்னை உலகப் பல்கலைக் கழகக் கட்டடத்தைச் சார்ந்த 'பாலிமர்' விடுதியில் நடைபெற்றது. தமிழக அறிவியல் கழகம் இந்நிகழ்ச்சியை நடத்தியது. 'தென்மொழி' இதழாசிரியர் திருக்குறள்மணி இறைக்குருவனார், நேரியல் (சால்வை) ஒன்றை, திரு. இராமருக்குப் போர்த்திச் சிறப்பித்தார். திரு. நிக்கோலசு அவர்கள் கொடுத்த அறிக்கையிலும்,





படிப்பகம்

www.padippakam.com



"திரு. இராமர் தம் கண்டுபிடிப்பை எனக்கு ஆய்வின் மூலம் காட்டினார். திரு. இராமர் 'தைலோ புளோரா' என்ற நிலைத் திணைக் குடும்பப் பெயர் கொண்ட ஒரு பச்சிலையைப் பயன்படுத்தியுள்ளார் எனத் தெரிந்து கொண்டேன். இது எரிபொருள் தன்மை கொண்டது. இதனின்று உருவாக்கிய எரிபொருளை இரு சக்கர ஊர்தியில் ஆய்வுக்கு உட்படுத்தினோம். இவ்வெரிபொருளில் எவ் வகை மாசும் தென்படவில்லை. இது முற்றிலும் நடைமுறைப் பயன் படுத்தத்திற்குரிய எரிபொருள் என்பதை உறுதிப்படுத்துகிறேன்" எனக் கூறியுள்ளார்.

இந்நிகழ்ச்சிகளுக்குப்பின் திரு. இராமர் இந்தியக் காப்புரிமை கோரியுள்ளார். உலகக் காப்புரிமைக் குழுவில் இந்திய நாடு உறுப்பாக வில்லை. அது உறுப்பான பின்பு அதற்கும் கோரிக்கை விடுக்க உள்ளார்.

இத்தற்கிடையில் அமெரிக்க மாநிலம் ஒன்றில் திரு. இராமரைச் சிறப்பித்துப் பட்டயம் ஒன்றை வழங்க அழைப்பு வந்துள்ளது. ஆங்க்காங்கு(Hongkong) நிறுவனம் ஒன்றும் அவரின் ஆய்வை நேரில் செய்து காட்ட அழைத்துள்ளது. இப்போது இராமர் ஆங்க்காங்குக்குச் சென்றுள்ளார்.

இவ்வளவு வெளிநாட்டு அழைப்பு ஆர்ப்பரிப்புகள் நடக்கும் இந்நேரத்திலும்கூட இன்றைய இன்றியமையாத் தேவைப் பொருளும் – பொருளியல் மாற்றத்தையே உருவாக்கவல்ல பொருளும் நாளைய – இல்பொருளுமான கன்னெய்க்கு மாற்றுக் கன்னெய் (Alternative Petrol) – எரிபொருளைப் பற்றிய ஆய்வை இந்நாடு ஊக்கவும் இல்லை; உணரவும் இல்லை!

திரு. இராமர் கண்டுபிடித்த பொருளில் ஏதோ உண்மை இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இதை நோக்குகிறோம். அறிவியலறிஞர்களும் செய்தியாளர்களும் அரசு அதிகாரிகளுமான குழு ஒன்றை அரசு அமைத்து எரிபொருளின் உண்மையை வெளிப் படுத்தி இந்நாட்டுக்குப் பயன்படச் செய்ய வேண்டுகிறோம். அன்றேல் வெளிநாட்டவர், யாரேனும் அவரின் வாய்ப்பாட்டின் படி செய்துதர, அதனை நாம் அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம்.

அந்நேரத்தில் அதில்கூட தரகுபெற இந்நாட்டுத் தரகு வணிகர்க ளும் தரங்கெட்ட அரசியலார் சிலரும் வெட்கங்கெட்டு நிற்கவுங் கூடும்!

— மா. பூங்குன்றன்,
அமைப்பாளர் : 'தமிழக அறிவியல் கழகம்'

படிப்பகம்

www.padippakam.com

# மாதப்போக்கின் புதிய கருத்து!

— தமிழம் பன்னீர் —

மாதப்போக்கின்(MENSTRUATION)பொழுது பெண்களை நாம் பல வகைகளில் இழிவுபடுத்துகிறோம்; அச்சுறுத்துகிறோம்; அவர்கள் மேல் இரக்கம் கொள்கிறோம். குருதிப்போக்கு (BLEADING)நாட்களில் அவர்களைத் தனியே இருக்கும்படி தள்ளி வைக்கிறோம்.

ஒரு பெண்ணின் கருப்பையில்(UTERUS) கருக்கொள்ளா முட்டைகளையும், பிறவாத குழந்தைகளுக்குக் கருப்பையின் உட் சுவரில் உகந்த வகையில் பெருகி வளர்ந்த உள்வரி(LINING) இழைமங்களையும்(TISSUES) கருப்பை வெளியேற்றுவதற்கு ஒவ்வொரு மாதமும் அவளுக்குக் குருதிப் போக்கு ஏற்படுகிறது.

இதைப்பற்றி இப்பொழுது உயிர் மலர்ச்சி உயிர் நூலறிஞர் (EVOLUTIONARY BIOLOGIST) செல்வி மார்க்கி புரோபெட்டு (MARGIE PROFET) புதிய கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் அமெரிக்க பெர்குலேயைச் சேர்ந்த கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். பாலியல் நிகழ்வின்போது ஒரு பெண்ணின் கருப்பை, கருக்குழாய்(FALLOPIAN TUBE) ஆகியவற்றுள் ஆண் கரு நீர்மம்(SPERM) நுழைகிறது. அதில் தீங்கு தரும் நோய் நுண்மங்க ளும்(MICROBES) உள்ளன. அவற்றுக்கு எதிராகக் கருப்பையைக் காக்கும் நுண்ணியக்க(MECHANISM) மலர்ச்சிதான் மாதப்போக்கு என்று அவர் கருதுகிறார்.

இந்தக் கருத்தின்படி கருக்குழாயுள் ஆண்கரு நீர்மத்தோடு தட்டுத் தடுமாறி நுண்ணுயிரிகளும்(BACTERIA) அதிநுண்ணுயிரிகளும் (VIRUSES) நுழைகின்றன. அவற்றால் கருப்பையில் எளிதாக நோய் தொற்றிக் கொள்கிறது. நோய் தொற்றுவதால் ஒரு பெண்ணுக்குக் கருத் தங்காது; அவள் நோய்வாய்ப் பட்டு இறக்கவும் நேரிடும். அதனால் அவற்றைத் தடுக்க உடல் மாதப் போக்கை மேற்கொள் கிறது. இந்த மாதப் போக்கில் வலிந்து தலையிடும் நுண்ணுயிரிகளுக்கு எதிராக உடல் இருமுனைப் போர் நடத்துகிறது. அது நோய் தரும் நுண்மங்கள் தொற்றிய இடங்களில் உள்ள கருப்பை உள்தோல் இழைமங்களைக் கழித்துவிடுகிறது; நோய்த் தடைகாப்புப் பெற்ற(IMMUNE) உயிரணுக்கள்(CELLS) கொண்ட குருதியால் அந்தப்

படிப்பகம்

www.padippakam.com



பகுதியை அலம்பி நுண்ணுயிர்களை அழிக்கிறது. அது, இவ்விரண்டு போர்களையும் ஒரே நேரத்தில் செய்கிறது.

ஏன் கருப்பையின் உள்வரி இழைமம் பயன்படும் வரையில் அதில் தங்கியிருக்கக் கூடாது? அதில் சிறிதளவு வெளிப்பட்டுப் போயினும் ஏன் இப்படிப்பட்ட குருதிப் போக்கு ஏற்படுகிறது? குருதியின் உதவியில்லாமல் உணவு செரிமானக் குழாயின் உள்வரி இழைமம் ஒவ்வொரு இரண்டு அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கிறது; உடல் தோல் ஒவ்வொரு நாளும் பத்தாயிரக் கணக்கில் உயிரணுக்களை உதிர்க்கிறது; மற்ற உறுப்புகள் தங்களைத் தாங்களே புதுப்பித்து ஒட்டுதலைச் செய்து கொள்கின்றன. இவை யாவும் இப்படி நடைபெறும்பொழுது ஏன் இறுதி மாதப் போக்குக்கு முற்பட்ட (PRE MENOPAUSAL) பெண்களின் உடல்கள் ஒவ்வொரு மாதமும் மாதப்போக்கின்போது இழைமத்தையும், குருதியையும் கொட்டி மதிப்புமிக்க ஊட்டங்களை (NUTRIENTS)– சிறப்பாக இரும்பு ஊட்டத்தை இழக்கின்றன என்னும் கேள்விகளுக்குச் செல்வி புரோபெட்டு விடை காண்கிறார்.

மாதப்போக்கு பெண்களுக்கு அதிகத் தொல்லை தருகிறது. அது இல்லையென்றால் உடலில் மிக இன்றியமையாச் செயலொன்று நடைபெற முடியாமற் போகும். சினை முட்டை வெளியாவதைத் (OVULATION)தொடர்ந்தும், முட்டைக் கருவுயிரி(EMBRIYO) கால் கொள்ளும்(IMPLANT)பொழுதும், பின் மகப்பேற்றுக் காலத்தின்(POST PARTUM)போதும் வேறுவகைக் குருதிப் போக்குகள் ஏற்படுகின்றன. அவை இடைவெளி விட்டுக் கருப்பையைத் துப்புரவாக்குவனவாகவும், அழையாமல் நுழையும் நோய்தரும் நுண்மங்களைத் துடைத்தழிப்பனவாகவும் இருக்கலாம்.

நாம் பொதுவாக எண்ணிக் கொண்டிருப்பதுபோல் மாந்தருக்கும் மற்ற உயர்நிலைப் பாலூட்டிகளுக்கும்(PRIMATES) மட்டுமே மாதப் போக்கு ஏற்படுவதில்லை என அவர் கூறுகிறார். கடந்த நூற்றாண்டுக்கு முற்பட்ட அறிவியல் இலக்கியங்களை அவர் பெருவாரியாக ஆராய்ந்தார். வௌவ்வால்கள், வயிற்றுப்பைப் பூனைகள் (MARSUPIAL CATS), மரம்வாழ் மூஞ்சூறுகள்(TREE SHREWS), பழங்காலக் குரங்குகள் ஆகியவற்றோடு கூடப் படிநிலை வளர்ச்சிக் காலத்தால்(REVOLUTIONERY TIME) பிரிக்கப்பட்ட பல பாலூட்டிகள் ஆகியவை மாதப் போக்குக்கு ஆட்பட்டிருந்தனவாக அவர் கண்டறிந்தார். நாம் எளிதாகக் காணமுடியாத குருதிப்போக்கைப் பல பேரினங்கள்(SPECIES) கொண்டிருந்த போதிலும், ஆராய்வாளர்கள் தங்கள் நேரத்தைச் செலவிட்டு ஆய்வு செய்தால்

படிப்பகம்

www.padippakam.com



கிட்டத்தட்ட எல்லாப் பாலூட்டிகளுமே மாதப் போக்குக்கு ஆளாவது வெளிப்படும் என்கிறார் அவர்.

அவர் தம்முடைய நிலைப்பாடற்ற கருத்துகளை(HYPOTHESIS) மருத்துவச் சிக்கல் உடையவை என்கிறார். நோய் தொற்றுவதைக் குருதிப்போக்குத் தடுக்குமானால், மாதப் போக்கை முழுமையாக நிறுத்தக் கூடிய கருத்தடை மருந்துகள்(CONTRACEPTIVES) உட்கொள்வதைப் பெண்கள் தவிர்க்கலாம். அத்துடன் விளங்கிக் கொள்ள முடியாத கருப்பைக் குருதிப்போக்கை, நோயைத் தடுக்க உடல் நடத்தும் ஒருவகைப் போராட்ட அறிகுறியாக, அதாவது, நோய்த் தொடக்க அடையாளமாகக் கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமாக நீர்(HORMONS)சுரப்பதால் பெண்களுக்கு அப்படிப் பட்ட குருதிப்போக்கு ஏற்படுவதாக மருத்துவர்கள் கருதுகின்றனர். மேலும் பெண்களுக்கு இடுப்பறை நோய்(PELVIC INFECTION) தொற்றச் செய்யும் எதிர்ச் செயலாகவும் அதைக் கருதுகின்றனர். இது முற்றிலும் தலைகீழான கருத்து என்று அவர் அழுத்தமாகக் கூறுகிறார்.

"கருவறைக் குருதிப்போக்கால் நோய்த் தொற்றுகிறது என்பது தீயணைப்போரால்தான் தீப்பற்றுகிறது" என்பதுபோல் உள்ளது எனச் செல்வி புரோபெட்டு கூறுகிறார். தாம் சொல்வது சரி என்றால் விளக்கமுடியாத குருதிப்போக்கை, இயக்கு நீரைக் கொண்டு நிறுத்துவதே மருத்துவர்களின் கேடான செயல் என்கிறார். கிளாமிடியா(CHLAMYDIA) என்னும் ஒருவகை நுண்ணுயிர் தொற்று ஆய்வினைச் செய்து அதன்பிறகு நோயாளிகளுக்கு நுண்ணுயிர் கொல்லி(ANTIBIOTIC) மருந்துகளைத் தரவேண்டும் என்பதே சரி என்கிறார்.

உள் கருப்பைக் கருவியைப்(INTRA UTERINE DEVICES) பயன்படுத்தும் பெண்களுக்கு ஏன் அதிகமாக மாதப்போக்கு ஏற்படுகிறது என்பதின் புதிர்களைப் புதிய கொள்கைகள் விளக்கும் என்கிறார். அதைப் பயன்படுத்துவதால் உள்கருப்பையில் வீக்கம் ஏற்படுகிறது. பொதுவாகவே வீக்கம் என்பது நோய்த் தொற்றின் அறிகுறிதான். கருப்பை தன்னிடம் நோய்த் தொற்றிக் கொண்டது என்று நினைத்து, குருதிப்போக்கை அதிகரிக்கிறது என்பது தம் ஊகம் (GUESS) என்கிறார் அவர்.

விளக்க முடியாத குருதிப்போக்குக்கு வேறு கரணியங்கள் இருக்கலாம். சான்றாக, கட்டிகள், கருப்பைப் பரு(FIBROID) அல்லது இடம் பெயர்ந்து கருக் கொள்ளுதல்(ECTOPIC PREGNANCY) ஆகியவற்றின் குருதிப்போக்குகளைக் கூறலாம். அப்படிப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



நோய்த் தொற்றுதலையும் நாம் கருதிப் பார்க்கவேண்டும் என்கிறார் அவர். சிலர் இந்த நோக்கு தவறானது என்று நிறுவப்படலாம் என்று கூறுகின்றனர். இருந்தாலும் புதிய கொள்கையுடைய மற்ற அறிவியலாளர்கள் இந்தக் கொள்கை அறிவார்ந்த(BRILLIANTLY) முறையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்கின்றனர். பெரும்பாலான பாலூட்டிகளுக்கு(MAMMALS) மாதப்போக்கு ஏற்படுகின்றது என்பது பற்றியும், அதிகக் குருதிப்போக்கானது நோய்த் தொற்றோடு தொடர்புடையது என்னும் கொள்கை பற்றியும் அவர்கள் கேள்விகளை எழுப்புகின்றனர். "மாதப்போக்குப் பற்றிய செயலுற்ற பகுப்பாய்வின்(FUNCTIONAL ANALYSIS) முதன் முதலான உண்மை முயற்சி இதுதான்; அவர் மேற்கொண்டுள்ள வழிமுறை சரியானதுதான்" என்று மர். சியார்சு சி வில்லியம்சு என்பவர் கூறியுள்ளார். மேலும் அவர், "செல்வி புரோபெட்டின் அணுகுமுறை பயன்தரும் வகையில் திரும்பக் கூடும். அது மக்களைத் தூண்டி, அவர்கள் கருத்துகள் சார்பான மற்றும் எதிரான சான்றுகளை அளிக்கச் செய்யும்" என்கிறார்.

செல்வி புரோபெட்டு தம் 35-ஆம் அகவையில் 'மாக்குஆர்த ருடைய' 'மேதை'ப் பரிசைப் பெற்றார். உடல் பற்றிய ஆய்வுக்காக வும், மரபுசாரா(UNORTHODOX) சுவையார்வக் கிளர்ச்சிப்(PIQUEANT) போக்கில் நிலைத்துப் போயிருந்த அறிவியல் துறையில் அவர் மேற்கொண்ட அணுகு முறைக்கும் அந்தப் பரிசு அவருக்கு அளிக்கப் பெற்றது. அறிவியல் அறிஞர்களும் உடற்கூறு வல்லுநர்களும் ஒதுக்கித் தள்ளிய படிநிலை வளர்ச்சியின் பொதுவான அருநிகழ்ச்சிக ளைப்(COMMON PLACE PHENOMENA)பற்றிய கொள்கைகளை அவர் வெளியிட்டார்.

மருத்துவமனைகள் வெளியிட்ட மாதப்போக்குப் பற்றிய விளக்கங்கள் அவருக்கு நிறைவளிக்கவில்லை. பெண்ணின் மாதப் போக்கை நற்பேறு அற்றது என்றும் இயக்குநீர்ச் சுழற்சியினால் உண்டாகும் தேவையற்ற துணைப்பொருள் வெளியேற்றம் என்றும் கூறி, அதைப் பொருட்படுத்தாத மருத்துவ விளக்கங்கள் அவருக்குச் சினமூட்டின. மாதப்போக்கு என்பது நோய்க்கு எதிராகப் பெண்களின் காப்பிற்காக ஏற்பட்ட ஒருநிகழ்ச்சி என்னும் கருத்து பல ஆண்டுகளுக்கு முன்பே அவருக்குத் தோன்றிற்று.

அவர் இதில் விரிவாக ஆய்வு செய்ததால் அந்தக் கொள்கைக்கு வலுவான சான்றுகள் ஏராளமாகக் கிடைத்தன. தேவையற்ற அலைவுறும்(OSCILLATING) இயக்குநீர்த் துணைப் பொருள் வெளி யேற்றம்தான் மாதப்போக்கு என்பதைவிட வரையறை செய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



ஓர் இலக்கை நாம் அடைவதற்குப் படிநிலை வளர்ச்சியாய் உடல் ஏற்றுக் கொண்டுள்ள ஒரு நிகழ்ச்சிதான் இது என்பதற்குச் சான்றுகளை அவர் தேடினார்.

அதற்காக அவர் உடலியங்கியல்(PHYSIOLOGY) நூலைக் கற்றார். கருப்பைச் சுவரில் சுருள் பாய்குழாய்(SPIRAL ARTERY) என்னும் ஒருவகைக் குருதிக் குழாய் உள்ளது. அது இயக்குநீர்த் தூண்டலால் கருப்பைக்காகத் திறந்து அதனுள் குருதியைக் கொட்டுகிறது. முதலில் அது இறுக்கமாக மூடிக் கொண்டு மாதப்போக்கை இயக்குகிறது. பிறகு விரைவாகத் தளர்கிறது(DILATE). சுருள் பாய்குழாய் சுருங்கி இழைமத்தைக் கொல்கிறது. மறுபடியும் அது தளர்ந்து இறந்த இழைமங்களை வெளித் தள்ளுகிறது.

மாதப்போக்கில் வெளியாகும் குருதிக்கு உறையும் தன்மை குறைவு. இந்தத் தன்மை கருப்பையைத் தூய்மை செய்யும் குருதிப் பாய்வுக்கு உகந்தது. ஆனால் உடலில் வேறு இடங்களில் வெளிப் படும் குருதியில் காற்றுப் பட்டவுடன் கட்டிவிடும்.

மாதப்போக்கிற்கு ஏற்பிணக்கத் திறன்(ADAPTIVE) இருப்பதைத் தம் கருத்திற்குச் சான்றாகக் கொண்டார். அதன் அடிப்படையில் அவர் குருதிப்போக்குக் கொள்கை ஆய்வை மேலும் தொடர்ந்தார். ஆண் கரு நீர்மம் ஒரு வலிமையான நோய் கடத்தி என்பதற்கு மருத்துவமனை உறுதிச் சான்றுகள் அவருக்கு ஏராளமாகக் கிடைத்தன. இருந்த போதிலும் கருப்பை வாயைச் சுற்றிலும் உள்ள சளிமம்(MUCUS) எந்த உயிர்ப் பொருளையும்(ORGANISM) கருப் பையின் மேற்பகுதிக்குச் செல்லவிடாமல் வழியை அடைக்கிறது. ஆனால் கருக்கொள்வதற்காகக் கருப்பையில் காத்திருக்கும் சினை முட்டையை(EGG) ஆண்கரு நீர்மம் நெருங்குவதற்குத் தங்கு தடையின்றி அந்தச் சளிமம் தன்னை ஊடுருவிச் செல்ல அதற்கு இடந்தருகிறது.

ஆணிலிருந்து பிறக்கும் அல்லது பாலியல் உறவின்போது பெண் குறிப் பள்ளத்திலிருந்து தொற்றிக் கொள்ளும் நோய் நுண்மங்கள் ஆண்கரு நீர்மத்தின் ஊடே சென்று கருப்பை வாய்வழிக் கருப்பையுள் செல்லக் கூடும். அப்படிச் செல்லும் நோய் நுண்மங்கள் பெண்ணின் உள்ளுறுப்புகள்மீது போர் தொடுக்கக்கூடும். அந்தப் பெண்ணுக்கு அல்லது கருப்பையுள் கால்கொண்டிருக்கும் ஏதேனும் முட்டைக் கருவுயிர்க்கு(EMERIYO) நோய் பற்றக் கூடும்.

மாதப்போக்குக்குக் காப்பளிப்பது பற்றி மற்றொரு சான்று குறிப் பிடுகிறது. கருப்பையுள் ஊடுருவும் நோய் நுண்மங்களைச் சூழ்ந்து

படிப்பகம்

www.padippakam.com



போரிடும் வேற்று உயிர்க் கொல்லி(MACROPHAGES) என்னும் உயிரணுக்கள் நெறி விலக்காகக் குருதியில் நிறைந்துள்ளன. அவை நோய் நுண்மங்களைக் காக்கும் இரும்பு ஊட்டத்தை அவற்றினின்றும் பிரித்துத் தனிமைப் படுத்துகின்றன.

மாந்தரைப் போல் பிற இனப் பெண் பாலூட்டிகளையும் ஆண்கரு நீர்மத்தின் நோய் நுண்மம் தொற்றிக் கொள்கிறது, என்பதை அவர் அறிந்தார். அதன்பின் அவர் மாதப்போக்கும் மற்றக் கருப்பைக் குருதிப்போக்கு வகைகளும் எல்லாப் பாலூட்டி இனங்களுக்கும் பொதுவானவை என்பதைக் கண்டார். பார்வையில் படும்படி, அல்லது மறைவாகக் குருதிப்போக்குக்கு ஆளாகும் பல இனங்களின் பட்டியலை அவர் தொகுத்தார். மாதப்போக்குக்கு ஆட்படாத எந்த ஒரு பெண்ணும் இருப்பதற்கு இணக்கச் சான்றுகள் (PERVASIVE EVIDENCE) இல்லை என்பதைக் கண்டார்.

மாந்தரில் பாலூட்டிகளுக்கு எல்லாம் அதிகமான குருதிப் போக்கு ஏற்படுகிறது. ஏனெனில் அவர்கள் அடிக்கடி அதிகமான பாலியல் ஈடுபாடு கொள்கின்றனர். அதை அவ்வளவுக்கு ஏற்கும் திறனும் பெற்றுள்ளனர். அதனால் அவர்களுக்குப் பாலியல் தொடர்பு மூலம், கருப்பைத் தொற்று நோய் அதிக அளவில் பற்று கிறது. பெண்களுக்குப் பேறு காலத்தில் குருதிப்போக்கு ஏற்படுவ தில்லை. அப்பொழுது பெண்ணின் கருப்பை வாயை தடித்த ஒரு வேதியல் எதிர்ப்புக் கொண்ட சளிமப் பூச்சு(COAT OF MUCUS) மிகச் செப்பமாக மூடுகிறது. அதனால் ஆண்கரு நீர்மத்திற்கு அதனுள் புகுந்து கருப்பைக்குச் செல்ல முடிவதில்லை. கருக்காலத் தின் கடைசி இரண்டு மாதங்களின்போது அது தன்னுள் வேற்றுப் பொருள்புக இடந்தருகிறது. அதனால் அந்தக் காலத்தின்போது பாலுறவில் ஈடுபடும் ஆண்கள் ஆணுறையைப் பயன்படுத்துதல் வேண்டும்.

உடல் வளப்பமுள்ள பெண்களைவிட பிள்ளைப் பேற்றுக்குப் பிற்பட்ட மாதப்போக்குப் பெண்களிடம் கருப்பை வாய்ச் சளிமம் மிகத் தடிப்பாக உள்ளது என்கிறார் அவர். மாதப்போக்கின்போது இது ஒரு தடுப்புச் சுவர்போல் அமைந்து கருப்பையைத் தூய்மை செய்யும் குருதி இழப்பில் பாதியைச் சரியீடு செய்கிறது. ஆண்கரு உயிரணுக்கள் கருப்பையுள் நுழைந்து சினை முட்டையை அடையும் தேவை இல்லையானால் அவற்றையும் அவற்றைச் சார்ந்த நோய் நுண்மங்களையும் அந்தச் சளிமம் கருப்பையின் வாயிற்புறத்திலேயே தடுத்து நிறுத்துகிறது.

— நன்றி : இந்து 6.10.93

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளங்கைக்குள் உலகம்

— மா. பூ. தமிழ்மொய்ம்பன் —

மாந்தன் அறிவியலின் பாதையில் மிகவும் முன்னேறி வந்துள்ளான். அறிவியலில் ஆயிரம் ஆயிரம் அரிய, வியப்பான, பயனான பொருள்களையும், ஊர்திகளையும், மருந்துகளையும் கண்டு பிடித்த மாந்தன் இப்போது இணையம்(இன்டர்நெட்) என்ற உலக இணைப்புக் கருவி ஒன்றைக் கண்டுள்ளான். செய்திகளை ஒருவருக் கொருவர் அறிந்து கொள்ளப் பல ஆண்டுகள்கூட ஆகிக் கொண் டிருந்த அந்தக் காலத்திலிருந்து மாந்தன் இப்போது பத்து நொடிக்குள் உலகமெங்கும் தனித்தனியே செய்திகளை அனுப்பும் அளவிற்குக் கண்டறிந்த புதுமைதான் இணையம் என்பது.

தனி மாந்தத் தொடர்புக்கு இதுவரை பயன்பட்ட கண்டு பிடிப்புக் கருவி தொலைபேசியாகும். இதுவே இணையத்தின் முதல் தேவைக் கருவியும் ஆகும். இணையத்திற்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் மாந்த அறிவின் சிறந்த சான்றுகளாகும். இவை அனைத்தும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள்தான் கண்டுபிடிக்கப் பட்டன. இணையத்தின் மற்றொரு இன்றியமையாத் தேவை கணிப் பொறி. இது இணையத்திற்கு மட்டுமல்லாமல் பல நிலைகளுக்குந் துணைபுரியும் பொறியாகும். மக்களின் இன்றியமையாத் தேவை யாகவும் மாறி வருகின்றது. அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் போன்ற முதன்மையான அனைத்து இடங்களிலும் இக் கணிப்பொறியின் தேவை பெருகிக்கொண்டே வருகின்றது. ஓர் அலுவலகத்தின் உள்ளேயே ஒரு கணிப்பொறியில் செய்யும் பணிகள் அங்குள்ள அனைத்துக் கணிப்பொறிகளிலும் இணைப்புக் கொடுக்க அனைத்துக் கணிப்பொறிகளிலும் செய்யும் பணிகள் ஒவ்வொரு கணிப்பொறியிலும் காணுமாறு உள்ளிணையம் LAN (LOCAL AREA NETWORK) என்ற இணைப்பு பயன்படுகின்றது. அதேபோல் அருகில் உள்ள வெவ்வேறு அலுவலகங்களில் உள்ள கணிப்பொறிகளுடன் தொடர்பு கொண்டிருக்கப் பெரும்பிணையம் WAN (WIDE AREA NETWORK) என்ற இணைப்பு பயன்படுகிறது.

அதேபோல் உலகமெங்கும் உள்ள அனைத்துக் கணிப்பொறிக ளுடனும் தொடர்புகொள்வதற்கு உதவும் ஒரு பெரும் இணைப்பே இணையம்(இன்டர்நெட்) எனப்படும். உலகின் எந்த மூலையில்

படிப்பகம்

www.padippakam.com



நடக்கும் செய்திகளையும் இணையத்தில் கண்டு அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் வெளியிடப்படும் இதழ்களை நாம் சென்னையில் அமர்ந்துகொண்டு அதே நேரத்திலேயே படிக்கலாம். இதழ்கள் மட்டுமன்றிப் பொழுதுபோக்கும் நிகழ்வுகளாக உள்ள அனைத்தையுமே நாம் பார்க்கலாம், படிக்கலாம், சுவைக்கலாம்!

பெரிய நூலகமொன்றையே இணையத்தில் இணைத் துள்ளனர். அதன்வழி அங்கிருக்கும் ஆயிரக்கணக்கான நூல்களில் நமக்குத் தேவையான ஒன்றைத் தேடிப் படிக்கமுடியும். அன்றாட அறிவியல் செய்திகளையும் நமக்குத் தேவையான குறிப்புகளையும் இதிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மாணவர்களின் படிப்புக்குத் தேவையான பல செய்திகளையும் பாடங்களையும் இணைத்திலிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் மாணவர்களின் கல்வியறிவு கூடுகிறது. அவர்களின் நேரம், அலைச்சல் மிச்சமாகின்றன. தேவையான நூல்கள் கிடைக்காமல் சோர்ந்துபோகும் நிலை மாறிவிட்டது.

**இணையத்தில் இணைவது எப்படி ?**

இணையத்தில் இணைவதற்கு முகாமையாகக் கணிப்பொறியும் தொலைபேசியும் இருக்க வேண்டும். இதில் இணைவதற்கு

1. டி.சி.பி/ஐ.பி
2. செல்(SHELL)

என இருவகை இணைப்புகள் உள்ளன. இந்த இணைப்பில் முதலில் கூறிய டி.சி.பி/ஐ.பி இணைப்பில் படங்களும், ஓவியங்களும், உரைகளும் பார்க்கலாம்; படிக்கலாம்.

ஆனால் இரண்டாம்வகை இணைப்பில் உரைகளைப் படிப்பது மட்டுமே முடியும். இதில் படங்களும், ஓவியங்களும் பார்க்க முடியாது. டி.சி.பி/ஐ.பி இணைப்பில் பயன்பெற அதிகத் தொகை செலவாகும். அதாவது,

*100 மணிக்கு உரு. 3000/-*

*250 மணிக்கு உரு. 6000/-*

*500 மணிக்கு உரு. 10,000/-*

*100 மணிநேரம் அல்லது ஓர் ஆண்டுக்கு என வரையறை செய்யப்பட்டுள்ளது. எது முதலில் முடிகின்றதோ, அத்துடன் இணைப்பு முடிந்துவிடும்.*

*அடுத்ததாக, செல் கணக்கில் வெறும் உரை மட்டும் காண்பிக்கப்படுவதால் செலவு குறைவு. இந்தக் கணக்கில் மாணவர்களுக்குச் சலுகை உள்ளது.*

படிப்பகம்

www.padippakam.com



*500 மணிக்கு மாணவர்களுக்கு உரு. 500/-*

*500 மணிக்குப் பொதுவானவர்களுக்கு உரு. 5000/-*

மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களிலிருந்து மேற்படிப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் இச்சலுகை உண்டு.

இந்த இணைப்பில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துச் சென்னை அயல்நாட்டுத் தொடர்பு நிலையம் (VSNL) என்ற இந்திய அரசு நிறுவனத்தில் படிவத்தைத் தரவேண்டும். இருபது நாள்களுக்குள் இணைப்பு வந்துவிடும்.

**இணையத்திற்குத் தேவையானவை:**

இணையத்தில் தேடித்தேடிப் பார்ப்பதுதான் வேலை என்பதால் நாம் வேகமாகச் செயல்பட வேண்டும். எனவே மிகவும் அதிவிரைவு இயக்கமுடைய கணிப்பொறி ஒன்றை வாங்கவேண்டும்.

586 கணிப்பொறி - ஒன்று

33.6 இணைமாற்றி(MODERN) - ஒன்று

தொலைபேசி - ஒன்று

தேவையான மென்பொருள் (சாப்ட்வேர்கள்)

இணையத்திற்குப் பல மென்பொருள்கள் வெளிவந்து விட்டன. அவற்றில் அதிகப்படியாக மக்கள் விரும்பும் மென்பொருள்கள் இரண்டுதாம். அவை,

வலையமைப்பு நோட்டகர் (நெட்ஸ்கேப் நேவிகேட்டர்)

இணையச் செல்நர் (இன்டர்நெட் எக்சுப்ளோரர்)

செல் இணைப்பை வாங்கியிருப்பவர்களுக்கு இந்த மென் பொருள்கள் பயன்படா. ஆனால் இவ் விணைப்பில் எழுத்துகள் தவிரப் படங்களைப் பார்க்க முடியாது. அதாவது – எடுத்துக்காட்டாக, 'தினமணி' செய்தித்தாளை இணையத்தில் படிக்கிறோம் என்று வைத்து கொள்வோம். டி.சி.பி/ஐ.பி இணைப்பில் அவ்விதழில் உள்ள அனைத்தும் படிக்கலாம். படங்கள் உள்பட. ஆனால் செல் இணைப் பில் அப்படிப் படிக்க இயலாது. உரைகள் மட்டுமே படிக்க முடியும்.

**இணையம் செய்யும் உதவிகள்**

நீங்கள் ஒரு தொழில் முனைவோராக இருந்தால், தொழிலை வெளிப்படுத்த அலைந்து கொண்டிருக்கத் தேவையில்லை. இணையத் தின் உலகத்தைச் சுற்றி வந்தாலே போதும். உங்களுக்கு என ஒரு தளத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதற்குப் பின்னல் தளம் (WEBSITE) என்று பெயர். இதில் உங்கள் தொழிலைப் பற்றிய

படிப்பகம்

www.padippakam.com



அனைத்துச் செய்திகளையும் பதிவுசெய்ய வேண்டும். உங்களுக்கு என ஒரு பின்னல்தள முகவரியைக் கொடுப்பார்கள். இம்முகவரியை யார் பார்வையிட்டாலும் அதில் உங்கள் தொழில் பற்றிய செய்திக ளைப் பார்த்து உங்களிடமே தொழிலை ஒப்பந்தம் செய்து கொள்வர். அல்லது நீங்கள் ஒரு கதையாசிரியராக இருந்தால், உங்கள் கதைக்குத் தேவையான புத்தகக் குறிப்புகளை நீங்கள் இணையத் திலேயே பார்த்துக் கொள்ளலாம். உங்கள் கதைகளையும் இதிலேயே அனுப்பி வைக்கலாம். நீங்கள் அன்றாடம் படிக்கும் செய்தித்தாள், கிழமை இதழ்கள், மாத இதழ்கள் முதலிய அனைத்து இதழ்களையும் நீங்கள் இணையத்திலேயே படித்துக் கொள்ளலாம். வணிகர்களுக்கு ஏற்ற வகையில் இணையத்தில் பல செய்திகள் உள்ளன. நாட்டு நடப்பு, வணிகத்தில் விலை ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றையும் அறியலாம்.

பொழுதுபோக்குகளிலும் இணையம் உதவுவது பொதுமக்க ளுக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்திதான். இணையத்தில் ஒரு முகவரியைப் பயன்படுத்தி வீட்டிலிருந்தபடியே திரைபடச் சீட்டைப் பதிவு செய்யலாம். அப்படிச் செய்யும்போது ஒரு கமுக்க எண்ணை அவர்கள் உங்களுக்குத் தருவார்கள். படம் தொடங்குவதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன்பு சென்று திரைப்படச் சீட்டை வாங்கிக் கொள்ள வேண்டும். அதிலும் நீங்கள் விரும்பிய சீட்டைப் பதிவு செய்து கொள்ளலாம். தொடர்வண்டி, வானூர்தி போன்றவற்றிலும் ஊருக்குச் செல்வதற்கெனச் இடப்பதிவு செய்யலாம். இதிலும் ஓர இடம் நடு இடமாகப் பதிவு செய்யலாம்.

**இணையத்தில் மடல்**

பொதுவாக வெளிநாடுகளுக்கு மடல் எழுதுகிறோம் என்றால் அஞ்சற்செலவு கூடுதல் மட்டுமல்லாமல் போய்ச் சேரவும் பத்து நாள்களாகும். கிடைக்காமலும் போகலாம். ஆனால் இணையத்தில் உள்ள மடல் என்னும் பகுதியிலிருந்து எந்த நாட்டுக்கு வேண்டு மானாலும் மின் அஞ்சல் வழி (E-MAIL) மடல்களை அனுப்பலாம். அதற்கான கட்டணம் ஓர் உருவா தான். இம்மடல் எழுதி அனுப்பிய மூன்று நொடிகளுக்குள் அங்குச் சென்றுவிடும். இம் மடலில் எவ்வளவு பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதலாம். ஒரு புத்தகத் தைக்கூட அனுப்பலாம். இம்முறைக்கு **மின்-அஞ்சல்**(E-MAIL) என்று பெயர். ஆனால் இம்மடலை அனுப்புவதற்கு அனுப்புவரிடமும் பெறுபவரிடமும் இணையத்தின் இணைப்பு இருக்கவேண்டும். அப் போதுதான் இது செயல்படும். மேலும் வெளிநாடு செல்வதற்கு வேண்டிய மடல்கள், குறிப்புகள் போன்ற அனைத்தையும் இதன்

படிப்பகம்

www.padippakam.com



மூலம் அனுப்பிவிடலாம். மடல் அனுப்பி, அவர்கள் விடை எழுதி, நமக்கு வந்து சேர இருபது நாள்கள் காத்திருக்க வேண்டிய தேவையே இனி இல்லை. மடல் திரும்ப வரவில்லை என்றால் இன்னொரு மடல் உடனே அனுப்பலாம். இணையத்தில் உள்ள இம் மடல் தொடர்பு மிகவும் எளிதாக உள்ளமையால் அனைவரும் விரும்பி இதனை வாங்கிப் பயன் பெறுகின்றனர்.

இணையத்தில் சேரவும் கணிப்பொறி வாங்கவும் இயலாத பொருளியல் சூழலில் வெளியே பல இடங்களில் இணையத்தில் இணைவதற்கு உரிய கணினியையும், ஏந்துகளையும் செய்து வைத்துள்ளனர். இவ் விடங்களில் இணையம் உலகைச் சுற்றி வர ஒரு மணி நேரத்திற்கு உரு. 30 முதல் 75 வரை வாங்குகின்றனர். அதில் ஒரு மணிநேரம் என்ன வேண்டுமானாலும் பார்க்கலாம், படிக்கலாம், பழகலாம். நீங்களும் ஒரு கணினியை வாங்கி அதை இதுபோல் வாடகைக்கு விட்டு வருவாய் பெறலாம்.

இப்போது உள்ள கணினியின் பயனையும் இணையத்தின் பயனையும் கூறிக்கொண்டே போகலாம். இன்னும் எத்தனைப் பயன்கள் வரும் என்று பொறுத்திருந்து பார்ப்போம்! ○

## இறைவனோடு பேசும் மொழியாம்!

*"சென்னை உயரற மன்றம் ஆங்கிலத்தின் அடிமைத் தளையில் உள்ளது. எழுத்து, பேச்சு, நடவடிக்கை எதிலும் தமிழ் இல்லை. புகுந்த வீட்டிற்குச் செல்லும் பெண், என்ன பாய்ச்சலுடன், உணர்ச்சி பொங்கத் தாய்வீட்டில் அடியெடுத்து வைப்பாளோ, அப்படித் தமிழில் பேசக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் மகிழ்ச்சிப் பெருக்குடன் பயன்படுத்திக் கொள்கிறேன்!"*

— இவ்வாறு கடந்த இருமாதங்களுக்கு முன் சென்னையில் திரு.செ.தெ. நாயகம் பற்றிய நூல்வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கித் தமது தலைமையுரையில் பேசியவர் சென்னை உயரற மன்ற நடுவர் எம். கற்பகவிநாயகம்.

இவர் சென்ற மாதம் சென்னை சமற்கிருதக் கல்லூரியில் நடைபெற்ற சமற்கிருத நாள் விழாவுக்குத் தலைமை தாங்கி உரை யாற்றிய போது, *"சமற்கிருதம் இறைவனோடு பேசுகின்ற மொழி; அம்மொழி தெரியாதவர்கள்கூட அதன் சிறப்பைச் சுவைக்க முடியும்; தமிழுக்கும் சமற்கிருதத்துக்கும் வேறுபாடு ஏதுமில்லை; திருக்குறளுக்கும் பகவற் கீதைக்கும் வேறுபாடு இல்லை. சமற்கிருதம் அழகு என்றால், அந்த அழகுக்கு அழகு சேர்ப்பது தமிழ்!"* என்று பேசியிருக்கிறார்.

அதே விழாவில் பேசிய ஓய்வு பெற்ற உச்சநெறி மன்ற நடுவர் கே.செ. பரிபூரணம், *"சமற்கிருதம் நாகரிகமான புதிய (நவீன) மொழி"* என்று கூறியிருக்கிறார்.

இவர்களுக்கெல்லாம் பேசும் வாய்ப்புக் கிட்டாமலே போகட்டும்!

— கடுங்கோ

படிப்பகம்

www.padippakam.com

# இடைவெளிகள்

— அன்பரசன் —

ஐயா சாலையார் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க அறிவியக்கப் பேரவை இல்லத்தின் முன் தமிழறிஞர்களின் கூட்டம்...

பலரும் ஐயா அவர்களின் வாழ்வின் சிறப்பையும், தமிழ் ஈடுபாட்டையும் நினைவுகூர்ந்து இரங்கலுரையாற்றினர்.

வந்திருந்தோரில் தொண்ணூறு விழுக்காட்டினர் ஐம்பதுக்கும் மேலான அகவையுடையவர்களாகவே இருந்தனர். அவர்களுள் பெரும்பான்மையினர் தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றவர்களாகவும், தமிழறிஞர்களாகவும் இருந்த அக் காட்சி நெஞ்சை நெகிழ்த்தது.

நம் அருந்தமிழ் ஐயா பாவலரேறு அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றதைத் தொடர்ந்து ஐயா சாலையார்... — இப்படியே இருக்கிற இந் நூற்றுவருள் ஒவ்வொருவராகத் தம் வாழ்நாளை முடித்துச் சென்று கொண்டிருக்கிற இவ்வவலச் சூழல் நெஞ்சை அடைத்தது.

தமிழறிஞர்களாக எவருளர் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; தமிழறிந்தவர்களாகக்கூட அடுத்தத் தலைமுறையினரில் ஆட்கள் தெரியவில்லையே...

இலக்கண, இலக்கியப் புலமைச் சிறப்பில் பேர்படைத்த இத் தமிழ்ப் பேரறிஞர்களின் தொடர் நிலையாளர் எவரும் இல்லையே.... — என்கிற வருத்தம் நெஞ்சை உடைக்கிறது.

தமிழ் இளைஞர்களுக்குத் தமிழில் அக்கறையில்லை. பிழை யின்றித் தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் பல்லாயிரவருள் ஒருவர் இருப்பரா என்பதே ஐயத்திற்குரியது.

தமிழினமான உணர்ச்சிகூட ஓரளவு இக்கால் இளைஞர்க ளிடம் விரவி இருக்கிறது. ஆனால் தமிழின் அறிவு இல்லையே....

உணர்ச்சி என்பதுகூட ஒருவகையில் அறியாமையின் பொருள் தானே. அறிவு வித்துக்கு ஆழ்ந்த உணர்வும், செயலும் அல்லவா விளைச்சல் பொருள்கள். அவ் வித்தே வாய்க்கப் பெறாதோர்க்கு விளைச்சல் எங்குக் கிடைக்கப் போகிறது.

அவ் வறிவு ஆழப்படாததால், இளமையில் உணர்ச்சியாய்ப் பொங்குகிற பல இளைஞர்கள் கால வளர்ச்சியில் மங்கிப் போக அன்றோ செய்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் அறிவும், தமிழின – குமுக – அரசியல் – பொருளியல் அறிவும் ஆழ்ந்து பெறாமல் இத் தமிழ்ப்பெரு நிலமும், இனமும், மொழியும் வீழ்ந்து போவதை எவ்வாறு மீட்கமுடியும்.

திரைக் கூத்துகளும், விளையாட்டுப் போக்குகளும், மதவியல் மயக்கங்களும் அல்லவா தமிழிளைஞனை அலைக்கழிக்கின்றன.

அந்த அலைக்கழிப்புகளுக்குள்ளிருந்து அவனை மீட்டெடுத்து இத் தமிழிய நோக்கங்களில் கருத்து செலுத்துகிறபடியான பணிகளில் இக்கால் பல இயக்கங்கள் செயல்படுவது உண்மையே யானாலும், அவ்வியக்கச் செயல்பாடுகள் யாவும் தமிழிய உழவுக்குத் தேவை யான முழுமை கொண்டனவல்லவே.

அவ்வாறிருக்கையில், தமிழிய அறிவை அவ்விளைஞர்கள் எங்கிருந்து பெறுவர்.

இற்றைத் தமிழறிஞர்கள் பலரின் அறிவுச் செல்வம் இன்னது என்று முழுமையாய் அறிந்து கொள்ளுகிற திறத்தில்கூட இவ்வினப் பிறங்கடையினர் இருப்பதில்லையே.

இளைஞர்களின் இத்தகைய நாட்டமின்மைக்கு இளைஞர்க ளையே குறையாக்கித் தமிழறிஞர்கள் வருத்தங் கொள்ளாமலில்லை.

ஆயினும் அவ்வருத்தம் எவ்வாறு மாறும் என்பதில் அவர்கள் கருத்துச் செலுத்துவதில்லை.

அவர்களுக்கும் அவர்களைத் தொடர்ந்திருக்கும் இவ்விளைய தலைமுறையினர்க்குமான இடைவெளி மலைக்கும் மடுவுக்குமான தாக அன்றோ இருக்கிறது.

இவ்விடைவெளி இட்டு நிரப்பப்பெற வேண்டுவது என்பதிலான அக்கறைகூட அறிஞர்களுக்குத்தானே இருக்கமுடியும்.

நெருப்புச் சுடுவதை உணர்த்துவதும், மலத்தையும் மண்ணையும் தின்பதை மறுப்பதும் ஈன்றவர் கடமையன்றோ?

கரம்பு நிலங்களைப் பண்படுத்தாமல், விளைச்சல் செய்யாமல் மண்ணைக் குறைகூற இயலாதுதானே.

இளைஞர்களின் உணர்வுகளைச் சூம்ப வைக்கவும், அறிவைச் சாம்ப வைக்கவுமான ஆரியப் பார்ப்பனிய வல்லரசியச் சூழ்ச்சிக் கவர்ச்சிக்கு இரையாகிற இற்றைத் தலைமுறையினரை மீட்கிற பொறுப்பு தமிழறிஞர்களிடமன்றோ இருக்கிறது.

தமிழ்ப்புலமை ஊட்டத்தை இளையவர்க்குப் புகட்டாமல் எங்ஙனம் அத்தலைமுறை வளரும்; அடுத்த தலைமுறை காலூன்றும்.

இடைவெளிகளை இட்டு நிரப்பாமல், இளைஞர்களை ஊக்கப் படுத்தித் தம் வழிப்படுத்துகிற நீள்வினையில்லாமல் எங்ஙனம் நீளும் நடி?

படிப்பகம்

www.padippakam.com



*தமிழிய அறிஞர்களே உங்களை நோக்கித்தான் ஏக்கத்துடன்... வேட்கையுடன்.... வறண்ட நிலமாய்க் காய்ந்திருக்கிறது இளந் தலைமுறை.*

*அறிவுப்பசி யற்றோர்க்குரிய நோயறிந்து பசிக்கச் செய்யுங்கள்..... அறிவூற்றி வளர்த்திடுங்கள்.....*

*ஆம்...*

*அடுத்தூன்றும் நல்லாளிலாத குடி இடுக்கண்கால் கொன்றிட வீழத்தானே செய்யும்...*

---

## பேராசிரியக் குழந்தைகள்

ஐயா சாலையார்–சாலினியார் இணையர் தில்லிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஒவ்வோர் ஆண்டும் தங்கள் விடுமுறைக் காலத்தில், ஒரு சுற்றுச் செலவுத் திட்டம் போட்டுக் கொண்டு தமிழகத்திற்கு வருவது வழக்கம்.

இன்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன் அவ் வாறான தங்கள் சுற்றுச் செலவுத் திட்டம் ஒன்றில் தென்மொழி இல்லம் வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். தென்மொழி அப்போது கடலூரிலிருந்து வந்துகொண்டிருந்தது. அதுவரை ஒருவர்க்கொருவர் பாரத்துக் கொள்ளாது மடல் தொடர்பு மட்டுமே வைத்துக் கொண்டிருந்த நிலையில், சாலையார் ஐயா கடலூரில் தென்மொழி இல்லத்தைத் தேடிப்பிடித்து வந்து விட்டார்கள்.

பாவலரேறு ஐயா, அவர்களை வரவேற்கச் சென்றபோது, "நான் பெருஞ்சித்திரனைப் பார்க்க வேண்டும்" என்று பாவலரேறுவிடமே கேட்க, "நான்தான் பெருஞ்சித்திரன்" என்று பாவலரேறு கூற "அட! நான் முதியவராக இருப்பீர்கள் என்று அன்றோ எண்ணியிருந்தேன். நரைத்தத் தலையோடு உங்களை எதிர்பார்த்து வந்தால் இப்படிக் கருத்த தலையுடன் இளைஞராக இருக்கறீர்களே!(அப்போது பாவலரேறுவுக்கு நாற்பது அகவைக்குள்) உங்கள் எழுத்து முதிர்ச்சிக் கும் உங்கள் உருவத்திற்கும் தொடர்பு இல்லையே" என்று வியப்புடன் பாவலரேறுவை உணர்ச்சிப் பெருக்கோடு கையைப் பிடித்துக்கொண்டு நெகிழ்ந்து கூறினார்.

அதன்பின் நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தனர்.

அப்போது சாலையாரிடம் பாவலரேறு ஐயா, "தங்களுக்கு மக்கள் எத்தனைப் பேர் ?" என்று வினவினார்.

சாலையார் "இருவர்" என்றார்.

"என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் ?".

"இருவரும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள்தாம். அவர்கள் வேறுயாரும் அல்லர். நாங்களேதாம்.எங்களுக்குக் குழந்தைகள்" என்று சாலையார் வேடிக்கையாகக் கூறியது எங்களுக்குப் புதுமையாகவும் சுவையாகவும் இருந்தது.

குன்றன்

---

படிப்பகம்

www.padippakam.com

# இந்த ஆண்டும் தொழிற்கல்வியில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு விட்டதே!

— மா. பூங்குன்றன்—

நாட்டின் இன்றைய தேவை தொழிற் கல்வியை அடிப்படையாகக் கொண்டே உள்ளது. பொறியியல், மருத்துவம், பல்தொழில் நுட்பம் இவைதாம் கல்வியியலில் மதிக்கப்பெறுகின்றன. மற்றுக் கலை, அறிவியல் பட்டப்படிப்புகள் அனைத்தும் பின்தள்ளப்பட்டுள்ளன.

பொறியியல், மருத்துவப் பட்டங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஏராளமான மாணவர்கள் படிவம் அனுப்புகின்றனர். அவை நுழைவுத் தேர்வு அடிப்படையில் முறைப்படுத்தப்பெற்று அம் மாணவர்கள் தனியார் கல்லூரிகளுக்கும் அரசுக் கல்லூரிகளுக்கும் அனுப்பப் படுகின்றனர்.

மதிப்பெண் அடிப்படையிலும் ஒதுக்கீடு அடிப்படையிலும் முறைப்படுத்தப்பட்டு மாணவர்கள் பிரிக்கப்படுகின்றனர். ஒதுக்கீடு முறையில் சாதி அடிப்படை மட்டுமல்லாமல் சிறப்பு ஒதுக்கீடுகள் சிலவும் செய்யப்பட்டுள்ளன. சிறப்பு ஒதுக்கீட்டில் படைத்துறையினர் பிள்ளைகள், ஊனமுற்றோர், விளையாட்டு வீரர்கள் போன்ற பிரிவில் தமிழறிஞர்களின் பிள்ளைகளும் இடம் பெற்றுள்ளனர். பொறியியல் படிப்பில் தமிழறிஞர் பிள்ளைகளுக்குப் பன்னிரண்டு இடம் கொடுத்துள்ளனர்.

இது பொதுவாகத் தமிழ் நாட்டரசு செய்த நிறைவான செயலாகும். திரு. ம.கோ.இரா. காலத்திலிருந்து இது தொடர்கிறது. தமிழறிஞர்களின் பிள்ளைகளும் பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் மேம்படவேண்டும் – அதற்கு வாய்ப்புகள் குறைவாக இருப்பினும் அவர்களை உயர்த்தி விடுவதற்கான திட்டந்தான் இந்தச் சிறப்பு ஒதுக்கீடு.

பொதுவாகப் பள்ளிகளிலிருந்து வெளிவரும் மாணவர்களில் தமிழ் வாயிலாக வந்த மாணவர்கள் பரவலாக நல்ல மதிப்பெண்கள் பெற்று வருகின்றனர். நுழைவுத்தேர்வும் இணைகின்றபோது அவர்கள் பெரும்பான்மையாகத் தோச்சி பெற்றுவிடுகின்றனர்.

உடனடியாக அவர்கள் ஆங்கில வாயிலில் பொறியியல், மருத்துவம் கற்க முடியாமல் திணறுகின்றனர். ஆங்கிலம் தெரியாத ஒன்றிற்காகவே தங்கள் திறன்களை இழந்து போகின்றனர். தமிழின் உதவி அவர்களுக்குத் தேவையாகிறது. அதற்காகப் பல்கலைக் கழகத் திலும் சில அரசு மற்றும் தனியார் கல்லூரிகளிலும் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்கள் மாணவர்கள்மீது கொண்ட அக்கறையால் தனி வகுப்புகளைத் தமிழ் உதவியுடன் கற்றுக்கொடுக்க முன் வந்துள் ளனர். அதன் அழுத்தம் இப்போது வரவர மிகுதியாக வளர்ந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



பேராசிரியர்கள் சிலர் வகுப்பிலேயே ஆங்காங்குத் தமிழ்ச் சொற்க ளுடன் விளக்கி மாணவர்கள் புரிந்துகொள்ள வகை செய்கின்றனர். தமிழில் விளக்குவதாலேயே மாணவர்கள் தங்களைக் குறைத்து மதிப் பிட்டுவிடுவார்களோ என்ற எண்ணமும் சிலரிடை நிலவுகிறது. எனினும் துறைநாட்டம் உள்ளவர்கள் இதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை.

ஆங்கிலத்தில் வாங்கிக் கொள்ள முடியாத நிலையில் சில மாணவர்கள் தங்கள் கல்வியை இடைநிறுத்தம் செய்ய முற்பட்டு விடுகின்றனர். இது மிகவும் கொடுமையானது.

இந்தச் சிக்கல்களைக் காணும்போது இதற்குத் தீர்வாக ஒன்று பள்ளிகளிலேயே ஆங்கில வாயிலை மேற்கொள்வது, அடுத்து பொறியியல் கல்லூரியில் தமிழைப் பயிற்றுமொழியாக அறிமுகப் படுத்துவது என இரண்டு வாய்ப்புகள்தாம் உள்ளன.

இரண்டாம் தீர்வை அரசு அமைத்துக் கொடுப்பதில் மும்முரம் காட்டவேண்டும். இந்தக் கல்வி ஆண்டிலும் தமிழ்வாயில் கொண்டு வருவதைத் தவிர்த்தது தமிழுக்கு – தமிழ் நாட்டுக்குச் செய்யும் குந்தகமாக அமைந்துவிட்டது.

பெரும்பான்மைத் தமிழ் மாணவர்களின் ஆற்றலையும் அறிவை யும் ஆங்கிலத்தில் வெளிப்படுத்த முடியாத ஒரு சிறு கரணியத்தால் புறக்கணித்ததாக ஆகிவிட்டது. இதில் தமிழ் நாட்டரசு இனியேனும் கவனம் செலுத்தி, அடுத்த ஆண்டிலாவது கட்டாயம் நிறைவேற்ற வகை செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றோம்.

முதற்கண் தமிழில் நூல்களையும், குறிப்புதவி நூல்களையும் வெளியிட வகை செய்தால் அது இப்போதேகூட மாணவர்கள் கற்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்கான ஒதுக்கீடுகளைக்கூட அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பெயர் பெற்ற கல்லூரிகளில் தராமல், அவை மூலைக்கொன்று எனவும் சரியாக அமைக்கப்படாத கல்லூரிகளெனவும் அவற்றிலும் சரியான துறைப் பிரிவு கொடுக்கா மலும் ஏனோதானோ என்று ஒதுக்கப்பட்டுள்ளன. சிறப்பு ஒதுக் கீடுகளை உண்மையிலேயே சிறப்பான வகையில் ஒதுக்கிப் பெருமைப் படுத்தும்படி தமிழ்நாட்டு அரசு வகை செய்யவேண்டும். மேலும் ஒரு கல்வி ஆண்டில் நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட இடங்க ளாக எண்ணிக்கை உயர்ந்து இருக்கும்போது தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்குத் தரும் சிறப்பு ஒதுக்கீட்டைக் கணிசமான அளவில் உயர்த்தலாம். பல ஆண்டுகளாகப் பன்னிரு இடங்களே தரப்பட் டுள்ளன. குறைந்த அளவிற்கு இருநூறு என்று தந்தாலுங்கூட அது பெருமைக்குரியதாக இருக்கும்.

இதை அரசு உடனடியாகக் கவனிக்குமா? ○

படிப்பகம்

www.padippakam.com

# விழாக்களும், பூசைகளும்.

விளைஞன்

உழைப்பையும், உழைப்பின் ஈட்டத்தையும் பெற்ற மகிழ்வின் கொண்டாட்டமே விழாக்களாய் இருந்த நிகழ்வுகள் மாற்றப்பட்டு — விழா வேடிக்கைகள் வலிய உருவாக்கப்படுகின்றன.

பொருள்புரியாமல், புரிந்துகொள்ள அஞ்சி, இவ் வினம் தலைமேற் கொண்டாடுகிற விழாக்கள் எல்லாம் இற்றைக்கு இவ் வின அடிமைத்தனத்திற்கே தீ நீர்வார்க்கின்றன.

மக்களின் உழைப்பு வாழ்வியலிலிருந்து விழாக்கள் விலக்கப் பட்டு, ஆண்டைகளின் ஆளுமை நிலைப்பாட்டுக்கானவையாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

ஆரியப் பார்ப்பனியம் கட்டுரைத்தத் தொன்மக் கதையளப்புகள் ஆரியத்தின் வெற்றியையே விழாக்களென அறிவித்தன.

அதேபோல் ஆங்கிலேயனின் ஆளுமை வரவாலும், பிற இன ஆண்டைகளின் உறவாலும் இத் தமிழினம் ஏற்றுக் கொண்ட விழாக்கள் ஏராளம்.

ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு மேலான விழா வேடிக்கைகளில் மூழ்கிப்போகிறது இவ் வினம்.

இவ் விழாக்களும் எளிமையாகவோ, வீட்டளவிலோ நின்று நிகழ்ந்து விடுவதில்லை.

சாலைகளிலும், சாலைகளைக் கடந்து ஊருக்குள் ஊடுருவியும் மக்களுக்குள் பகை மூட்டவும், பிளவாக்கவுமான வேலைகளையே செய்கின்றன.

அச்சத்தினால் வழிபடத் தொடங்கி நடத்திய விழாக்கள், இன்றைக்கு மதவலைப் பின்னலுக்குள்ளாகி மக்களையே அச்சப் படுத்துவனவாக மாறியிருக்கின்றன.

தன்னம்பிக்கை இழந்து, தன் உழைப்பின் ஈட்டம் தனக்கானது என்கிற உரிமை உணர்விழந்து, தன் வாழ்வு இழந்து வறுமையுறும் ஏழ்மையரின் விடியல் வாழ்க்கைக்குத்தான் விழாக்கள் என்று பொய்யுரைக்கப்படுகின்றன.

அப் பொய்ம்மையின் விழாச் சகதியிலிருந்து உய்ய இயலாமல் மாய்கிறது இப் பேரினம்.

விளைப்பின் ஈட்டங்கள் வேள்வியால் அழிக்கப்பட்ட அற்றை நிலை மாறி விழாக்களால் இக்கால் அழிக்கப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



— காய்கள் தட்டுப்பாடு உள்ள காலங்களில் பூச்செடிகளை நடுவதும் பூக்களைப் பூசையின் பெயரால் வாரிக் கொட்டுவதும்,

— பூசணிக் காய்களைத் தெருவெலாம் உடைத்தெறிவதும்,

— எலுமிச்சம் பழங்களை கடைப்புறங்களிளெல்லாம் பிதுக்கிப் பீய்ச்சுவதும்,

— தேங்காய்களை அடித்துடைப்பதும்.....

— எண்ணெயை எரித்து முழக்குவதும்.... '

ஐயகோ — இத்தகு மூடப்பழக்கங்களைக் காட்டுவிலங்காண்டி மாந்தன்கூட செய்திருப்பானா என்றே ஐயுற வேண்டியுள்ளது.

அக்கால் வேள்வியால் அழித்த நம் மக்களின் உழைப்பின் விளைச்சல்களைக்காட்டிலும், இவ்வகை வீணடிப்புகள் எவ்வளவு அதிகப்படியானவை.....

அறியாமையுற்ற நம் கைகளைக் கொண்டல்லவா நம் கண்கள் குத்தப் பெறுகின்றன.

காய்ந்து கிடக்கும் நம் கும்பிகளை ஈரப்படுத்திக் கொள்வதற்கு வழியின்றிப் போயினும் பூசைகளால்தாம் நாம் கடைதேறமுடியும் என்றெல்லவா நம்முள் மூடநம்பிக்கைகள் வளர்க்கப்பட்டிருக் கின்றன.

கடவுள் என்கிற நம்பிக்கை வேறு — அதற்கென விழா வேடிக்கைகள் என்று விளைச்சலை இறைத்து வீணடிப்பது என்பது வேறு.

உணவுக்கு வழியின்றி வாடிக்கொண்டு இதுபோல் வீணடிக்கிற மூடநம்பிக்கைகள் நம் தலையிலேயே மண்ணை வாரி இறைத்துக் கொள்ளுகிற பித்துத்தனமில்லையா?

என்றைக்குத் தெளியப்போகிறது இப்பித்து? உணரவேண்டாமா நாம்.

உணவுப் பொருள்களை வீணாக்குவது குறித்து அரசும், ஆளுமையரும் கவலை கொள்ளாமல் இருக்கமுடியும்; ஆனால்

உழைக்கும் தமிழக மக்களே,

நாம் அவ்வாறு இருக்கமுடியுமா?

விளைந்த விளைச்சலைத் தீக்கிரையாக்கினால் சட்டப்படி குற்றமெனில்—

விளைந்த விளைச்சலை இப்படி வீணாக்கினால் அதுவும் தானே சட்டப்படி குற்றமாக்கப்பட வேண்டும்.

குற்றஞ்சாட்டவேண்டாமா நாம்?..... எண்ணிப்பார்ப்போம். ❑

படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

**பல்லடம் தாய்த்தமிழ்ப் பள்ளி தொடக்கவிழா!**

பல்லடம் திருவள்ளுவர் கல்விப்பணி அறக்கட்டளையின் சார்பில் நிறுவப்பெற்றுள்ள தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளியின் தொடக்க விழா தி.பி. 2029 மடங்கல் 5 அன்று(21.8.98), நடுவர் எசு.முருகதாசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பள்ளியின் தாளாளர் திரு. ந. முத்துக்குமரன் வரவேற்புரை யாற்றினார். திருவாளர்கள் கோபி கோ.வெ. குமணன், திருப்பூர் ந.தங்கராசு, உடுமலை பேரா. பொ. பொன்னரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தாய்த்தமிழ்க் கல்விப்பணி ஒருங்கிணைப் பாளர் தியாகு, கோவை முதன்மைக் கல்வி அலுவலர் பொ.வி.க. பத்தவச்சலம் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். அறக்கட்டளைச் செயலாளர் ஈசுவரமூர்த்தி நன்றி நவின்றார்.

**மருத்துவர் கோவிந்தனார் உடல்நலம் பெறுகிறார்.**

நெடுநாள் தென்மொழியன்பரும் உடலியல் நூலாசிரியருமான மருத்துவர் கோவிந்தனார் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன் நேர்ச்சியொன்றிற் சிக்கியமையால் உடல்நலம் பெரிதும் குன்றி, மருத்துவமனையிற் பண்டுவஞ் செய்யப்பெற்று, இல்லத்தில் ஓய்வாக இருக்கிறார். படிப்படியாக அவரது உடல் தேறிவருகிறது.

புலவர் இறைக்குருவனார், திரு. மா. பூங்குன்றன் ஆகியோர், கடந்த கன்னி 5 அன்று(21.9.98) மருத்துவர் கோவிந்தனாரை அவரது இல்லத்தில் சந்தித்து நலம் உசாவினர். விரைவில் அவர் முழுநலம் பெறத் தென்மொழி குடும்பத்தின் சார்பில் தங்கள் விழைவினைத் தெரிவித்தனர்.

**நடுவர் திருக்குறள் இராமகிருட்டிணன் நலம்பெற்று வருகிறார்.**

நெஞ்சக நோய்த் தாக்கத்திற்காளாகிச் சென்னைத் தலைமைப் பொது மருத்துவமனையில் பண்டுவஞ் செய்யப்பெறும் நடுவர் திருக்குறள் இராமகிருட்டிணன் அவர்கள் நலம்பெற்று வருகிறார்.

புலவர் இறைக்குருவனார், திரு. மா. பூங்குன்றன் ஆகியோர் கடந்த கன்னி 5 அன்று (21.9.98) மருத்துவமனையில் திரு. இராம கிருட்டிணனைச் சந்தித்து நலம் உசாவி அளவளாவி வந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

# நினைவில் நிற்பவை...

மும்பைக்கு வருகைதரும் தமிழ அறிஞர்களும் பல்வேறு அமைப்புக ளைச் சார்ந்தோரும் தாராவிக்கும் வந்து நிகழ்ச்சிகளிற் பங்கேற்றுச் செல்வது வாடிக்கை.

தாராவியில் வாழ்பவர்களில் பெரும்பாலோர் ஏழை எளியவர்களான ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களே. அங்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வரும் அறிஞர்களோ பிறரோ அங்குள்ள மக்களோடு ஒன்றிப் பழகுவதோ உணவு உண்டு செல்வதோ இல்லை. அறிஞர் சாலையார் அவர்களும் அம்மா சாலினியார் அவர்களும் தாராவியில் தங்கி ஏழை எளிய மக்களோடு கலந்து பழகினர்; அவர்தம் இல்லங்களில் உண வுண்டு பெருமைப்படுத்தினர். அப்பொழுது சாலையார் அவர்கள் தில்லிப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முனைவர் சாலையாரை நினைவு கூரும்பொழுது இவ்விரு நிகழ்ச்சிக ளும் நெஞ்சில் நிழலாடுகின்றன.

— **இரா.பே. பெருமாள்,**
தாராவி – மும்பை.

## அறிஞர் கோ. கேசவன் மறைவு!

குமுகாயப் புரட்சி நோக்கங் கொண்டவரும் சிறந்த எழுத் தாளரும் பன்னூலாசிரியருமான அறிஞர் கோ. கேசவன் அவர்கள் கடந்த மடங்கல் 31 அன்று(16.9.98) மாரடைப்பால் இயற்கை யெய்தினார் என்பதையறிந்து பெரிதுந் துயருறுகிறோம்.

தமிழறிவும், வரலாறு, பொருளியல், குமுகாயம் முதலான துறைகளில் தெளிவுங் கொண்டு, ஆரவாரமும் விளம்பர நோக்கு மின்றி அரிய பல நூல்களைப் படைத்தளித்தவர் கோ. கேசவன். அவருடைய நூல் ஒவ்வொன்றும் கடின உழைப்பின் வெளிப்பாடு. விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டுத் தம் கருதுகோளாக எதையும் கூறாமல், தக்க சான்றுகளின் அடிப்படையிலேயே கருத்துகளை உறுதிபடக் கூறுவது கேசவனின் தனிச்சிறப்பு. அவரது 'கோயில் நுழைவுப் போராட்டம்' இன்னும் பல போராட்டங்களை முன்னெடுக்கச் செய்யும் திறம் வாய்ந்த நூல்.

'தமிழ் மொழி இனம் நாடு' என்னும் அவரது இறுதி நூல் தமிழ்நல, பொதுநல இயக்கங்களுக்குப் படைக்கலம்போல் விளங்குவது. அந்நூல் மக்களிடம் சென்றடைதற்கு முன்னமே அவர் மீளாத் துயில் கொண்டது நம்மை வருத்துகிறது. எளிய வாழ்வும் தொண்டுள்ளமும் அயராமுயற்சியும் உடைய அவர் பொதுவாழ்வில் ஈடுபடுவார்க்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். அவர்கள் குறிக்கோள் வெல்க!

படிப்பகம்

www.padippakam.com



# அறிவியப் பாவலர் முனைவர் சாலையார் மறைவு.

அறிவியப் பாவலர் முனைவர் சாலையார் ஐயா அவர்கள் சில ஆண்டுகளாகவே உடல்நலங் குன்றியிருந்தாலும் மருத்துவம் - மருந்து - பத்தியம் இவற்றுக்கிடையில், தமிழ் மொழி, இன நலங் கருதிய தம் எழுத்துப் பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். அம்மா முனைவர் சாலினியார் அவர்களுக்குத் துணையாக இருந்து திரு. அழகியநம்பியும், அவர்தம் துணைவியாரும் ஐயாவின் தேவைகளையும் பணிகளையும் செய்து வந்தார்கள்.

கடந்த கன்னி 17 காரி (3.10.98) அன்று இரவு ஐயா சாலையார் அவர்களுக்கு நோயின் தாக்கம் மிகுதியாகவே, மருத்துவரை இல்லத்திற்கு வரவழைத்தும், பின்னர்ச் சிலமணி நேரங்கழித்துத் தனியார் மருத்துவமனைக்கே சென்றும் மருத்துவம் செய்யப்பெற்றும் அது பயனளிக்காத நிலையில் ஐயா அவர்கள் அன்று இரவு 3.30 மணியளவில் நெடுந்துயிலில் ஆழ்ந்துவிட்டார்!



அதன்பின் செய்தி தெரிவிக்கப்பெற்று அறிவியக்கப் பேரவைச் செயலாளர் மணிமார்பன், ஞாயிறு விடியற்காலையில் வந்தார். தொலைபேசி வழியாகவும் வானொலி, தொலைக்காட்சி வழியாகவும் செய்தியறிந்து தமிழறிஞர்களும் அன்பர்களும் பேரவை இல்லத்துக்கு வந்து அறிவியப் பாவலர் ஐயா அவர்களுக்கு இறுதி வணக்கம் செலுத்துவது தொடர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



பாவலரேறு ஐயா அவர்களின் மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் அனைவரும் வந்து ஐயாவைக் கண்டு கதறிக் கண்ணீர் வடித்து நின்றனர்.

பிற்பகலில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி.வீரமணி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன், மார்க்கசிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் திரு. வே. ஆனைமுத்து, தமிழ் - தமிழர் இயக்கத் தலைவர் திரு. சுப. வீரபாண்டியன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கப் பொறுப்பாளர் மணிமாறன், தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சியின் பொறுப்பாளர் நன்னன் முதலானோர் ஐயா அவர்களுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்.

மாலையில் கல்வி அமைச்சர் பேரா. அன்பழகன், தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத் துறை மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் ஆகியோர் இறுதி வணக்கம் செலுத்தினர்.

அடுத்தநாள் (5.10.98) திங்கட் கிழமை காலை 8.30 மணியளவில் சாலையார் அவர்களின் 'பேரவை இல்ல' வாயிலில் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையிலும் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் முன்னிலையிலும் இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

முனைவர் ஆறுமுகனார், பேரா. சச்சிதானந்தம், எழுத்தாளர் திரு. சு. சமுத்திரம், முனைவர் சிலம்பொலி செல்லப்பன், முனைவர் மா. நன்னன், புலவர் இறைக்குருவனார், முனைவர் வா.செ. குழந்தை சாமி, வழக்குரைஞர் செந்தில்நாதன், ப்பாவலர் இன்குலாபு, திரு. எற்கோ, சொல்லாய்வு அறிஞர் அருளியார், பேரா. சாரதா நம்பியாரூரன், புலவர் இ.த. பச்சையப்பன், 'எழுகதிர்' அரு. கோபாலன், திரு. இரா. சனார்த்தனம், பேரா. பாலசுப்பிரமணியன், தேனிசைச் செல்லப்பா, திரு. சங்கமித்திரா, பெரும்பாவரசு வா.மு. சேதுராமன், திரு. இறை. பொற்கொடி, திரு. சமரசம், புலவர் த. சுந்தரராசன், முனைவர் சுப. வீரபாண்டியன், பாக்கொண்டல் மா. செங்குட்டுவன், திரு. சோவிஇராமலிங்கம், முனைவர் கொண்டல் சு. மகாதேவன், திருப்பூர் சத்திவேல், முனைவர் தமிழப்பன், திரு. ஈழவேந்தன், 'முகம்' மாமணி ஆகியோர் இரங்கலுரை யாற்றினர்.

காலை 10.30 மணியளவில், ஐயா சாலையார் அவர்கள் விரும்பியவாறு அவரது இறுதிச் செலவு மருத்துவ ஊர்தியில் தொடர்ந்தது. அன்பர்களின் கண்ணீர் சிந்தியவாறு அவரை வழி யனுப்பிவைத்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



அருந்தமிழ் அன்பர்களும் அறிஞர் பெருமக்களுமான திருவாளர்கள் கா.பொ. இரத்தினம், பொற்கோ, இரா. இளவரசு, ஈரோடு தமிழன்பன், இராமர் இளங்கோ, தமிழப்பன், இன்குலாபு, தஞ்சைவாணன், புலவர் இறைவிழியன், புலவர் தேவராசன், கலி. பூங்குன்றன், 'மூவேந்தர்' முத்து, க. குழந்தைவேலன், அறிவுமதி, ந. அரணமுறுவல், துரை. தென்னவன், 'சங்கொலி' திருநாவுக்கரசு, தமிழேந்தி, மலையமான், சரளாஇராசகோபாலன், சரசுவதி இராசேந்திரன், இரா. பதுமநாபன், குழ. கதிரேசன், தங்கவயல் வெற்றிச்செல்வன், க.ப. சின்னராசு, அ.சி. சின்னப்பா, வழக்கறிஞர் பி.வி. பத்தவச்சலம், வழக்கறிஞர் சோதிப்பிரகாசம், கலியாணி, கி. வெங்கட்ராமன், செல்வநம்பி (யோகநாதன்), செந்தமிழ்க்கோ, திரைப்பட இயக்குநர் சுப. முத்துராமன், வெள்ளையாம்பட்டுச் சுந்தரம், கணேசலிங்கம் உள்ளிட்ட ஏராளமானோர் ஐயா சாலையார் அவர்கட்கு வீரவணக்கம் செலுத்தினர்.

## நெகிழ்ந்த நெஞ்சங்கள்

மூத்த – தமிழறிஞர் சாலையார் அவர்களின் மறைவு உலகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு. உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடப்பதற்கு வித்திட்டவர்களில் அவரும் ஒருவர். உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தவும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். இறுதி வரை தமிழ் அரிமாவாகவே வாழ்ந்து மறைந்தார். அவரின் புகழ் வாழ்க!

— பழ. நெடுமாறன்.

உலகத் தமிழருக்காகவும் சிறப்பாக ஈழத் தமிழருக்காகவும் தொடர்ந்து உழைத்த அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

— முனைவர் கா.பொ. இரத்தினம்.

பாந்தநேயத் தமிழ் அரிமா தன் நெடுஞ்செலவை முடித்துக் கொண்டது.

— முனைவர் இரா. இளவரசு.

இயற்கை சிலவேளைகளில் மிகவும் கொடூரமானது. எமக்கு வேண்டியவரை வேண்டாத வேளையிற் பிரித்து விடுகிறது. தமிழீழம் காண விழைந்தார். அதற்கு முன்னர் பிரிக்கப்பட்டதே வருத்தம் தருகிறது.

— செ. கணேசலிங்கம்.

தமிழுரிமைக்குக் குரல்கொடுத்த வேழம் தலைசாய்ந்து விட்டது. தமிழின உரிமையைக் கையிலெடுக்கத் தமிழர்கள் தயங்காது நடையிடுதல் நம் வணக்கத்திற்குரிய சாலையார்க்கு நாம் செய்யும் கடனாகும்.

— புலவர் கி.த. பச்சையப்பன்.

படிப்பகம்

www.padippakam.com

அவர் காண விரும்பிய தன்மானத் தமிழகத்தை உருவாக்க உழைப்போம்! — புலவர் மு. இறைவிழியன்.

அறிவியக்க வேழம் சாய்ந்துவிட்டது. மொழி, இன மேம்பாட்டு உணர்வுகளுக்குக் கடும் அறைகூவல்கள் எழுந்துவரும் இன்றைய நிலையில் சாலையார் போன்ற விடுதலை மறவர்கள் ஒவ்வொருவராய் மறைந்து வருவது பெரும் அதிர்ச்சி தருவதாய் உள்ளது. — பாவலர் தமிழேந்தி.

வீறும் நெஞ்சுரமும் கொண்ட செம்மாந்த தமிழறிஞர் சாலை இளந்திரையன் அவர்களின் மறைவு, தமிழுக்கும் தமிழின – தமிழ் நாட்டு மக்கள் ஆகியோர்க்கும் பேரிழப்பாகும். — வே. ஆனைமுத்து.

சிறந்த தமிழறிஞராகவும், தமிழுக்குத் தொண்டு செய்வதில் சளைக்காதவராகவும் திகழ்ந்தவர் சாலை இளந்திரையன் அவர்கள். விழ்ந்து கிடக்கும் தமிழர்கள் நிமிர்ந்தெழ வேண்டும் என்று தூண்டியவை அவர்தம் படைப்புகள். — முனைவர் தமிழ்க்குடிமகன்.

'சாலையார்' என்று அனைவராலும் அன்பொழுக அழைக்கப்பட்டு, தமிழனின் மான வாழ்வுக்கு மாளாது பாடுபட்ட அரும் பெரும் போர்வீரரை, தமிழ்கூறும் நல்லுலகம் இன்று இழந்து, வறுமையாகி, வாழத் துடிக்கிறது! உரிமைப்போரின் குரலை நாம் இனி எங்கே கேட்கப்போகிறோம்! — கி. வீரமணி.

அவர் இல்லாத தமிழ்நாடு எம் போன்றவர்க்கு கதிரில்லாத வானமாகவே தெரிகிறது. அவர் இதுவரை பாய்ச்சிய ஒளிவெள்ளத்திலிருந்து ஒரு புதிய பரிதியை உருவாக்குவோம். புதிய விடியலை உண்டாக்குவோம். அதற்கான உணர்வெழுச்சியையும் அவருடைய எழுத்துகளே ஊட்டும். — 'எழுகதிர்' அரு. கோபாலன்.

தமிழ் – இனம் – நாடு என்னும் முந்நிலைக் கொள்கைகளுக்கும் இம் மண்ணில் கேடுசெய்து வரும் உட்பகைக் கேடர்களை எதிர்க்க – கண்டிக்க இம் மண்ணில் – வேறு எவர் உம் போல் இனி நிமிர்ந்து நிற்கவியலும்! பாவலரேறுவிற்குப் பிறகு உம்மையும் பறி கொடுத்து உள்ளமெலாம் எரிகின்றோம்! குலையெலல்லாம் சுடுகின்றது! உங்கள் உணர்வூட்டங்கள் எங்கள் குருதியில் உள்ளன. — சொல்லாய்வறிஞர் ப. அருளியார்.

தமிழீழம் அமைவதுதான் இலங்கைத் தீவில் அமைதி ஏற்படவும் இந்தியாவின் தெற்கெல்லைக்குப் பாதுகாப்பாகவும் அமையும் என அறுபதுகளில் இருந்தே பேசியும் எழுதியும் வந்த இந்திய நாட்டு, தமிழக முன்னோடி எங்கள் அருமைப் பேராசிரியர் சாலையார். — மறவன்புலவு க. சச்சிதானந்தன்.

www.padippakam.com

த.நா.செ. (ந) மா. 7211 பதிவு எண் : 8119/63 தென்மொழி

தமிழ் மரம் சாய்ந்துவிட்டது. எண்ணம், பேச்சு, எழுத்து அனைத்தும் தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பதாகவே இருந்து வந்த சாலையாரின் மறைவு தமிழர்களுக்கு ஒரு பேரிழப்பு.

— சிலம்பொலி சு. செல்லப்பன்.

தமிழ் தமிழினம் வாழும் மண் பாதுகாப்பிற்காக இறுதிவரை போராடிய அறிஞர் சாலையார் மறைவு, எம் இனத்திற்கு பேரிழப்பு.

— 'தேனிசை' செல்லப்பா.

சாலையாரின் உழைப்பு வீண்போகாது! அவரது கனவுகள் தாளாலான பூக்களல்ல! வெற்றியை நோக்கித் தமிழீழம். அதனுடன் அணிசேரும் தமிழகம். — நன்னன்.

தமிழுக்காக, தமிழனுக்காக, தமிழ் நாட்டுக்காக, பகுத்தறிவுக் காகக் குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் களத்தில் நின்று போராடிய போராளிகளில் ஒருவர் மறைந்துவிட்டார்.

— 'முகம்' மாமணி.

பகுத்தறிவுச் சுடரொன்று அடங்கிவிட்ட கவலை என்னை வாட்டுகிறது. — முனைவர் மா. நன்னன்.

தனித்தன்மை வாய்ந்த தமிழர். உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசாதவர். சொல்லிலும் செயலிலும் வேறுபாடு இல்லாதவர். நக்கீர மரபை இருபதாம் நூற்றாண்டில் கடைப் பிடித்தவர். தமிழ் மண்ணுக்கு, தமிழ் இனத்திற்கு, தமிழ் மொழிக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு. — முனைவர் வா.செ. குழந்தைசாமி.

குமுக நயன்மைக்காக வாழ்நாள் முழுதும் போராடியவர். சாதி குறித்துத் தெளிவான கண்ணோட்டம் உடையவர். உடன்பிறப்பு என்று சொல்லாதே. அளியன் (மைத்துனன்) என்று சொல். அப்போதுதான் சாதி ஒழியும் என்றவர். — க.எ. பாசுகரன்.

சாலையாரின் மறைவு 'அறிவுவழி'த் தோழர்களுக்கு பேரிழப்பு.

— திரு. மு.பா. எழிலரசு.

தமிழுலகுக்குச் சாலையாரின் மறைவு பேரிழப்பு.

— கி. வெங்கட்ராமன்.

தமிழ், தமிழன் வாழவேண்டும் என்னும் ஒரே நோக்கத்தோடு வாழ்ந்த பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கள் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். — கொண்டல் சு. மகாதேவன்

சொல்லைச் செயலாக்கப் போராடியவர். அனைத்திலும் விடுதலை பெற்ற தமிழினம் அவருக்குக் காணிக்கை.

— பாவலர் இன்குலாபு.

சொல்வேறு, செயல் வேறுபடாத ஒரு தமிழ் வேழம் இன்று சாய்ந்துவிட்டது. — முனைவர் சுப. வீரபாண்டியன்.

தென்மொழி அச்சகம், சென்னை - 5 தொலைபேசி : 854 7829

படிப்பகம்